
# இந்திய வரலாறு

3



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# இந்திய வரலாறு

## (வரலாற்றுப் பெரியார்கள்)

## மூன்றாம் வகுப்பு

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு — 1981
மறுப்திப்பு — 1983

ஆசிரியர்கள் :

திரு. டி. ஆர். இராதாகிருஷ்ணன்,
தலைமையாசிரியர்,
டாக்டர் அழகப்பச் செட்டியார்
பயிற்சிக் கல்லூரி மாதிரி
மேல்நிலைப் பள்ளி,
காரைக்குடி.

திருமதி ஏ. பி. ஜெயலட்சுமி,
தலைமையாசிரியை,
க்ஷத்திரிய மகளிர் மேல்நிலைப்
பள்ளி,
விருதுநகர்.

மேலாய்வாளர்கள் :

பேரா. எம். வி. சுப்பிரமணியம்,
ஸ்ரீபுரம் விரிவாக்கம்,
திருநெல்வேலி.

பேரா. டாக்டர்
என். சுப்பிரமணியம்,
98, என். ஜி. ஓ. குடியிருப்பு,
மதுரை.

**விலை ரூ. 2-00**

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது

அச்சிட்டோர் :
ராமா அச்சகம்,
மதுரை — 625 001.

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | கௌதம புத்தர் ... | 1 |
| 2. | மகாவீரர் ... | 4 |
| 3. | பேரரசர் அசோகர் ... | 6 |
| 4. | சந்திரகுப்த விக்கிரமாதித்தர் ... | 8 |
| 5. | ஹர்ஷவர்த்தனர் ... | 10 |
| 6. | நரசிம்ம பல்லவர் ... | 13 |
| 7. | இராசஇராச சோழர் ... | 15 |
| 8. | கோரி முகம்மது ... | 17 |
| 9. | கிருஷ்ணதேவராயர் ... | 19 |
| 10. | பாபர் ... | 21 |
| 11. | மகா அக்பர் ... | 23 |
| 12. | ஔரங்கசீப் ... | 26 |
| 13. | வீர சிவாஜி ... | 28 |
| 14. | இராபர்ட் கிளைவ் ... | 30 |
| 15. | வீரபாண்டிய கட்டபொம்மன் ... | 32 |
| 16. | ஜான்சி இராணி இலட்சுமிபாய் ... | 35 |
| 17. | சுவாமி விவேகானந்தர் ... | 38 |
| 18. | பாலகங்காதர திலகர் ... | 41 |
| 19. | வ. உ. சிதம்பரனார் ... | 44 |
| 20 | மகாத்மா காந்தி ... | 47 |
| 21. | பண்டித ஜவஹர்லால் நேரு ... | 50 |
| 22. | மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ... | 52 |
| 23 | சுபாஷ் சந்திர போஸ் ... | 55 |
| 24. | டாக்டர் அம்பேத்கார் ... | 57 |
| 25. | காமராஜ் ... | 60 |
| 26. | அறிஞர் அண்ணாதுரை ... | 62 |
| 27 | பெரியார் ஈ. வெ. ராமசாமி ... | 64 |

# 1. கௌதம புத்தர்

குழந்தைகளே, இப்படத்தைப் பாருங்கள். இது யாருடைய படம் தெரிகிறதா?

"தெரிகிறதே! அதுதான் புத்தருடைய படம்" என்று சொல்லுகிறீர்களா?

சரி, நீங்கள் சொல்வது மிகவும் சரி.

'புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு' என்று பாரதியார் நம் நாட்டைப் புகழ்ந்து பாடுகிறார். அப்படியானால் அந்த புத்தரின் வரலாற்றுச் சிறப்பை நீங்கள் அறிய வேண்டுமல்லவா? மேலே படியுங்கள்.



படம் 1. புத்தர்

சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு வடக்கேயுள்ள நேபாள நாட்டின் ஒரு பகுதியை ஓர் அரசர் ஆண்டுவந்தார். அந்த இராச்சியத்தின் தலைநகர் **கபிலவஸ்து**. மன்னரின் பெயர் **சுத்தோதனர்**. அவருடைய மனைவியின் பெயர் **மாயாதேவி**. இவர்களுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் **சித்தார்த்தர்**. அவர்கள் அவனை மிகவும் நேசித்தார்கள். துன்பத்தின் நிழலே அவன் மேல் படாமல் அவர்கள் அவனை அரண்மனையில் எல்லா வசதிகளுடன் வளர்த்தார்கள்.

உரிய வயதில் சித்தார்த்தனுக்கு **யசோதரை** என்ற அழகிய மங்கையை மணம் செய்வித்தார்கள் அவன் பெற்றோர். சித்தார்த்தனது இல்லறம் இன்பமயமாக இருந்தது. அவனுக்கு **இராகுலன்** என்ற ஒரு புதல்வனும் பிறந்தான்.

ஒருநாள், வசந்த காலத்தின் எழில் காட்சிகளைக் காண, சித்தார்த்தன் நகர்வலம் வந்தான். தன் அரண்மனை வாழ்வுபோலவே, மற்ற மக்களின் வாழ்வும் ஆனந்தமயமாக இருக்கும் என்று நினைத்த அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவன் கண்ட சில காட்சிகள் அவன் மனத்தைத் துன்புறுத்தின.

முதன்முதலில் அவன் கண்டது ஒரு நோயாளியை. அந்த நோயாளி விடாமல் இருமிக்கொண்டேயிருந்தான். படுத்திருந்த அவனால் எழுந்து 'உட்காரவோ நிற்கவோகூட முடியவில்லை. இதனைக் கண்ட சித்தார்த்தன் மனம் துன்பத்தால் நிரம்பியது.

அடுத்து அவன் கண்ட காட்சி அவனை மேலும் சங்கடத்திற்குள்ளாக்கியது. ஒரு குடுகுடு கிழவன், கோலூன்றித் தள்ளாடித் தள்ளாடி, நடக்கமுடியாமல் நடந்துவந்தான். முன்பு பிணியின் கொடுமையைக் கண்ட சித்தார்த்தன் இப்போது முதுமையின் கொடுமையைக் கண்டான். பிணியும் மூப்பும் மக்கள் வாழ்க்கையை துன்புறுத்துவதை அவன் நன்கு உணர்ந்தான்.

மேலும் செல்லும் வழியில் சித்தார்த்தன் கண்ட மூன்றாவது காட்சி அவனை நடுநடுங்க வைத்தது. ஆம். அவன் எதிரே ஒரு சிலர் ஒரு பிணத்தை இடுகாட்டிற்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்தார்கள். இப்போது சித்தார்த்தன் வாழ்வு பிணி, மூப்பு, சாவு இவை யாவும் அடங்கிய துன்பமயமானது என்பதைத் தெள்ளத் தெளியக் கண்டான்.

சித்தார்த்தன் மனத்தில் உடனே உலக வாழ்வின் துன்பங்களைப் போக்க ஒரு வழி காணவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. 'மக்கள் வாழ்க்கையைத் துன்பமற்ற, இன்பமுள்ளதாக ஆக்குவது எப்படி?' என்னும் கேள்வி அவன் மனத்தில் எழுந்தது. விளைவு?

அரண்மனைக்குத் திரும்பிய சித்தார்த்தன் அன்று இரவு முழுவதும் தூங்கவேயில்லை. 'உலக மக்களின் துன்பத்திற்கான அடிப்படைக் காரணம் என்ன?' என்று சிந்தித்துக்கொண்டேயிருந்தான். அரண்மனை வாழ்வை உதறித் தள்ளி, எளிய வாழ்க்கையை மேற்கொள்ள எண்ணினான். இல்லற வாழ்வு அவனுக்குக் கசந்தது. அன்று இரவே, அவன் தன் அருமைப் புதல்வனையும், அன்பு மனைவியையும் தனியே விட்டுப் பிரிந்து காட்டை நோக்கிச் சென்றான்.

காட்டில் பல காலம் சித்தார்த்தன் கடுந்தவம் செய்தான்; பலனில்லை. பல அறிஞர்களைச் சந்தித்துப் பேசினான்; பலனில்லை. ஒரு நாள் அவன் கயா நகருக்கு அருகில், ஒரு காட்டில் ஒரு போதி மரத்தடியில் ஆழ்ந்த தியானத்தில் இருந்தான். அப்போது அவனுக்கு ஞானோதயம் (மெய்யறிவு) ஏற்பட்டது. உலக மக்கள் வாழ்வின் துன்பத்தின் உண்மைக் காரணம் அவனுக்குப் புலப்பட்டது. அன்றுமுதல் சித்தார்த்தன் புத்தர் ஆனார். புத்தர் என்றால் மெய்யறிவு பெற்றவர் என்பது பொருள்.

புத்தர் பெற்ற மெய்யறிவு என்ன தெரியுமா?

ஆசையே எல்லாத் துன்பத்திற்கும் அடிப்படைக் காரணம். ஆசையை வெல்ல வேண்டும். அதற்கு மக்கள் புலன்களையும் மனத்தையும் அடக்க வேண்டும். மக்கள் எல்லோரும் எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்த

வேண்டும். ஒழுக்கமான வாழ்வு வாழ வேண்டும். இவையே அவர் கண்ட மெய்யறிவு. அன்றியும், எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாமையை அவர் ஒரு நல்லறமாகப் போதித்தார்.

புத்தர் தம் சமயக் கொள்கைகளை வாரணாசிக்கு அருகிலுள்ள சாரநாத் என்னுமிடத்தில் தம் சீடர்களுக்கு முதன் முதலில் உபதேசித்தார். அவர் போதித்த மதம் புத்த மதம் என்று அழைக்கப்படுகிறது.

மகத நாட்டு மன்னர்கள் புத்தரையும் அவரது மதத்தையும் ஆதரித்தனர். மக்களுக்குப் புரியும் மொழியில் அது உபதேசிக்கப்பட்டது. புத்த சங்கங்கள் அமைக்கப்பட்டன. அவை மக்களிடையே புத்த சமயத்தைப் பரப்பின. மௌரியப் பேரரசர் அசோகர், குஷாணப் பேரரசர் கனிஷ்கர், கன்னோசி பேரரசர் ஹர்ஷர் போன்ற மன்னர்களால் இம்மதம் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கும் பரவியது.

புத்தர் தமது எண்பதாவது வயதில் குசிநகரம் என்ற இடத்தில் மரணமடைந்தார்.

புத்தரின் பெருமையை உணர்ந்த உலகம் அவரை ஆசிய ஜோதி என்று புகழ்ந்துள்ளது. நமது நாட்டில் புத்த சமயம் மறைந்துவிட்டபோதிலும் ஸ்ரீலங்கா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளில் அது நன்கு பரவியுள்ளது.

## பயிற்சி

I. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது சொற்றொடரில் விடை தருக

(1) சித்தார்த்தருக்கு எங்கு மெய்யறிவு ஏற்பட்டது?
(2) சித்தார்த்தர் முதன்முதலில் தம் சமயக் கொள்கைகளை எங்கு உபதேசித்தார்?
(3) சித்தார்த்தருக்கு வழங்கும் வேறு சிறப்புப் பெயர்கள் யாவை?

II. பின்வரும் வினாக்களுக்கு 5 வரிகளுக்குள் விடை தருக

(1) புத்த சமயத்தின் முக்கிய கொள்கைகள் யாவை?
(2) புத்தரை ஆதரித்த மூன்று முக்கிய அரசர்களைக் கூறுக.

III. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை 5 முதல் 10 வரிகளில் தருக

(1) புத்தரின் இல்லற வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது?
(2) புத்த மதம் எவ்வாறு விரைவில் உலக மதமாய்ப் பரவியது?

# 2. மகாவீரர்

குழந்தைகளே, சென்ற பாடத்தில் புத்த சமயத்தை இந்தியாவிற்கும் உலகிற்கும் அளித்த புத்தரைப்பற்றிப் படித்தோம். அவர்போலவே, மக்களின் நல்வாழ்விற்குப் பாடுபட்ட மற்றொரு பெரியாரை இப்பாடத்தில் காண்போம். அவர் யார் தெரியுமா? அவர்தான் மகாவீரர்.



படம் 2. மகாவீரர்

யார் இந்த மகாவீரர்? யாரோடு வாளெடுத்துப் போர் செய்தார்? எந்த அரசை ஆண்டார்? இந்தக் கேள்விகள் உங்கள் மனத்தில் தோன்றுகின்றன அல்லவா? இதோ அவைகளுக்குரிய விடைகள்

இந்த மகாவீரர் வாளெடுத்து யாரோடும் போரிடவில்லை. எந்த இராச்சியத்தையும் வெற்றி கொள்ளவில்லை. ஆனால் மக்களின் நல்வாழ்விற்கான, முக்திக்கான ஒரு வழியைக் கண்டுபிடிப்பதில் வெற்றி கண்டார். அதனால்தான் அவர் மகாவீரர் ஆனார். இவரும் புத்தரைப்போலவே க்ஷத்திரிய இனத்தைச் சேர்ந்தவர், ஓர் அரசரின் அருமந்த புதல்வர்தாம்.

மகாவீரருடைய இயற்பெயர் வர்த்தமானர் என்பதாம். அவர் தந்தையார் சித்தார்த்தர்; தாயார் திரிசலா தேவியார்.

சுமார் 2,500 ஆண்டுகளுக்குமுன் மகாவீரர் வட இந்தியாவில் வைசாலிக்கு அருகிலுள்ள குந்தக் கிராமத்தில் பிறந்தார். உரிய வயதில் யசோதா என்னும் மங்கையை மணந்து, இனிதே இல்லறம் நடத்தினார். ஒரு பெண் மகவும் அவருக்கு இருந்தது. இருப்பினும், அவர் தீவிரமாக ஆன்மிகத் துறையில் இறங்கினார். தம் 36ஆம் வயதில் துறவியானார்.

பன்னிரண்டு ஆண்டுகள் மகாவீரர் கடுந்தவம் புரிந்தார். அதன் விளைவாக மக்கள் முக்தியடைவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடித்தார். மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து, புலன்களை வென்று, முக்தி அல்லது வீடுபேறு அடைய, வெற்றிகரமாக ஒரு வழி கண்டதனால் அவரை மகாவீரர் அல்லது ஜினர் (வெற்றி பெற்றவர்) என்று உலகம் போற்றுகிறது.

மகாவீரரது சமயக் கொள்கைகளைப் பரப்ப பல வட இந்திய அரசர்கள் உதவி செய்தனர். அவர் தம் கொள்கைகளை மக்களிடையே பரப்பி, தமது 72ஆம் வயதில் பாவா என்னுமிடத்தில் அமரரானார்.

மகாவீரர் பரப்பிய சமயம் சமண சமயம் என்று அழைக்கப்படுகிறது. இதை ஜைன சமயம் என்றும் கூறுவர். இச்சமயத்தின் மூன்று முக்கிய கொள்கைகள் மூன்று இரத்தினங்கள் (த்ரி ரத்ன—மும்மணிகள்) என்று அழைக்கப் படுகின்றன. அவையாவன:

(1) 'மகாவீரர் தவறே செய்யாதவர்; அவர் வழிநின்றால் மோட்சத்தை அடையலாம்.' இவ்வாறு நம்புவது நன்னம்பிக்கையாம்.

(2) 'இந்த உலகம் யாராலும் படைக்கப்படாமல் இயற்கையாகத் தோன்றியதே' என்று புரிந்துகொள்வது நல்லறிவு ஆகும்.

(3) உயிர்களைக் கொல்லாமை, பொய் பேசாமை, திருடாமை, சொத்துகள் சேர்க்காமை, கற்புடைமை ஆகியவை நன்னடத்தையாம்.

நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை என்ற சமண சமயத்தின் மும்மணிக் கொள்கைகள், வினைப் பயனின்றும் மக்களை மீட்டு, மோட்சத்தை அளிக்கும் தன்மையன.

இதோடுகூட அகிம்சையும், பிரம்மச்சர்யமும் சமண சமயத்தின் மற்ற இரு முக்கியக் கொள்கைகளாம்.

வேதங்கள், வேள்விகள், சமயச் சடங்குகள் முதலியவற்றில் மகாவீரருக்கு நம்பிக்கையில்லை. அவருக்குமுன்பே இருந்த சமயத்தைச் சீர்திருத்தி, சிறப்பாகப் பரவச் செய்ததே மகாவீரரின் சிறப்புப் பணியாகும்.

இன்றும் சமண சமயம் இந்தியாவில் பல இடங்களில் பின்பற்றப் பட்டு வருகிறது. குஜராத் மாநிலத்தில் சமண சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அநேகர் இருக்கின்றார்கள்.

மகாத்மா காந்திஜீ அவர்களும் மகாவீரரின் அகிம்சைக் கொள்கையைப் பின்பற்றி இரத்தம் சிந்தாமல் நம் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்ததை நாம் என்றும் நினைவிற் கொள்ளவேண்டும்.

## பயிற்சி

I. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான விடைகொண்டு பூர்த்தி செய்க

(1) மகாவீரர் பரப்பிய மதம் ______ மதம் ஆகும்.
(2) சமண சமயத்தின் முக்கிய கொள்கைகள் ______ என்று அழைக்கப்படுகின்றன.

II. பின்வரும் வினாக்களுக்கு 5 முதல் 10 வரிகளில் விடை தருக

(1) சமண சமயத்தின் மூன்று இரத்தினங்கள் யாவை?
(2) மகாவீரருக்கு 'ஜீனர்' என்ற பெயர் ஏன் ஏற்பட்டது?

# 3. பேரரசர் அசோகர்

குழந்தைகளே, சென்ற பாடத்தில் மகான் புத்தரைப்பற்றிப் படித்தீர்கள். இப்பாடத்தில் அவர் தோற்றுவித்த புத்த சமயத்தை உலக சமயமாக்கிய மாவீரர், கருணைக் கடல் அசோகரைப்பற்றிப் படிப்போம்.

அசோகர் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவர். அவ்வம்சத்தின் முதல் அரசரான சந்திரகுப்தரின் பேரர்; பிந்துசாரரின் புதல்வர். அவர் ஆண்ட மகத நாடு வட இந்தியாவில் இருந்தது. அதன் தலைநகரம் பாடலிபுத்திரம் ஆகும். அவர் சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன்பு மகத நாட்டை ஆண்டார்.



படம் 3. பேரரசர் அசோகர்

அசோகர் ஆட்சிக்கு வந்த போது, பாரதத்தின் பெரும் பகுதி மௌரியப் பேரரசில் அடங்கியிருந்தது. ஆனால், கிழக்குப் பக்கத்திலுள்ள கலிங்க நாடு மாத்திரம் தனித்துச் சுதந்திர நாடாக இருந்தது. அசோகர் அதனை வென்று தம் அரசுடன் சேர்க்க எண்ணினார். உடனே அதன்மீது போர் தொடுத்தார்.

இக்கலிங்கப் போர் பேரரசர் அசோகர் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. போரில் வெற்றி பெற்ற அவர், போர்க்களத்தில் ஓடிய இரத்த ஆற்றைக் கண்டார். எங்கும் பிணக் குவியல்கள். கை, கால், தலை வெட்டுண்டவர், கணவரை இழந்த மனைவியர், மக்களை இழந்த தாய்மார்கள் ஆகியோரின் கதறல்கள், துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் வீரர்கள், இக்காட்சிகள் அவர் மனத்தை மிகவும் வருத்தின. உடனே அவர் ஓர் உறுதி பூண்டார். 'இனிமேல் நான் வாள் எடுத்து ஒருபோதும் போர் செய்யமாட்டேன். தர்ம முரசு கொட்டி, அன்பால் மக்கள் உள்ளங்களை வெற்றி கொள்வேன். போரால் மக்களைக் கொன்று நாட்டை விரிவாக்க மாட்டேன்.' இந்த சபதத்தை அவர் நிறைவேற்றினார். போரை உடனே நிறுத்தினார்.

இக்கலிங்கப் போருக்குப் பிறகு அசோகர் அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட புத்த சமயத்தைத் தழுவினார். வேட்டையாடுதலையும் புலால் உண்ணுதலையும் கைவிட்டார், புத்த சமய அறக் கொள்கைகளின்படி

வாழ்ந்தார். அன்பு, அருள், அகிம்சை, எக்காலும் மக்கள் சேவை இவையே அவர் பின்பற்றிய கொள்கைகள் ஆயின.

அசோகரது செயற்பாடுகளால் சிறிய அளவில் நம் நாட்டில் மட்டும் பரவியிருந்த புத்த சமயம் உலக சமயமாயிற்று. நம் நாட்டில் மக்கள் புத்த சமய அறக் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழும்பொருட்டு, அவற்றைக் கற்றூண்களிலும் பாறைகளிலும் அவர் செதுக்குவித்தார். அவை மக்கள் கூடும் பொது இடங்களில் மக்கள் மொழியில் பொறிக்கப்பட்டிருந்தன. மக்கள் அவற்றைத் தவறாது பின்பற்றுகிறார்களா என்று பார்க்க 'தர்ம மகா மாத்திரர்கள்' என்ற அதிகாரிகளை அவர் நியமித்தார். அயல் நாடுகளுக்கு புத்த சமயத்தைப் பரப்பத் துறவிகளை அனுப்புவித்தார். அவருடைய மகனும் மகளும் இலங்கைக்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பினர்.

அசோகர் மக்களின் நன்மைகளை மறக்கவில்லை; அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார்; நாடெங்கும் போக்குவரவுக்காக நல்ல சாலைகளை அமைத்தார்; அவற்றின் ஓரங்களில் நிழல்தரும் மரங்களை வைத்தார்; பயணிகள் தங்க ஆங்காங்கே பல சத்திரங்களையும் சாவடிகளையும் நிறுவினார்; கிணறுகள் வெட்டுவித்து, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் குடிதண்ணீர் வசதி அளித்தார்; மேலும், மக்களுக்கும் மிருகங்களுக்கும் தனித்தனியே மருத்துவ மனைகள் அமைத்து உடல் நலம் பேணினார்.

அசோகர் நீதி தவறாத அன்பு வழியில் ஆட்சி புரிந்தார். வீரமும் கருணையும், அன்பும் அறமும் மிகுந்த அவரை வரலாறு மகா அசோகர் எனப் பாராட்டுகிறது.

சாரநாத் கல் தூணிலுள்ள அசோகச் சக்கரம் நம் நாட்டுக் கொடியின் மையத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள சிங்கச் சின்னமே நமது அரசாங்கச் சின்னமாகும். அசோகருடைய அற ஆழியையும், சிங்க உருவங்களையும் ரூபாய் நோட்டுகளிலும், நாணயங்களிலும், அஞ்சல்துறைகளிலும் நாம் காணலாம்.

அசோகர் காட்டிய அற வழி, அன்புவழி, மக்கள் நலவழி—அதுவே நம் பாரத நாட்டின் பெருவழி.

## பயிற்சி

விடைகள் தருக

(1) அசோகர் செய்த ஒரே போர் யாது? அப்போரின் முக்கிய விளைவு யாது?
(2) அசோகர் மக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை?
(3) அசோகர் புத்த சமயத்தை எவ்வாறு பரப்பினார்?
(4) நம் அரசு அசோகரை நினைவுகொள்ளும் வகையைக் கூறுக.

—

# 4. சந்திரகுப்த விக்கிரமாதித்தர்

அசோகருக்குப் பின் மௌரியப் பேரரசு சீர்குலைந்துபோயிற்று. அதற்கு 500 ஆண்டுகளுக்குப் பின்னர் குப்த மரபினர் மகத நாட்டை ஆளத் தொடங்கினர். மௌரியர்களுக்குப் பின் வடஇந்தியா முழுவதையும் மீண்டும் ஓராட்சியின்கீழ்க் கொண்டுவந்த பெருமை இவர்களையே சாரும்.

தலைசிறந்த குப்த மன்னர்களுள் ஒருவர் இரண்டாம் சந்திரகுப்தர் என்பவர். இவர் சமுத்திர குப்தரின் புதல்வர். தந்தையைப்போலவே பேராற்றல் மிக்கவர். போரில் பகைவர்களை வென்று, தம் நாட்டை விரிவுபடுத்தினார். எனவே, இவருக்கு விக்கிரமாதித்தர் அல்லது 'வீரத்தில் சூரியனை ஒத்தவர்' என்ற புகழ்ப் பெயர் ஏற்பட்டது.



படம் 4. சந்திரகுப்த விக்கிரமாதித்தர்

இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் சாகர்கள் என்ற வெளிநாட்டு இனத்தினர் வலிமை பெற்றுத் திகழ்ந்தனர். சந்திரகுப்த விக்கிரமாதித்தர் அவர்களையும் போரில் வென்றார். அதன் விளைவாக மாளவம், கூர்ச்சரம் ஆகியவை குப்தப் பேரரசுடன் சேர்க்கப்பட்டன. சாகர்களைப் போரில் வென்றதால் அவருக்கு சாகாரி என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. மாளவத்தின் தலை நகரான உஜ்ஜைனியை அவர்தம் நாட்டின் இரண்டாவது தலைநகர் ஆக்கினார்.

இவர் ஆட்சி காலத்தில் கடல் வாணிகம் பெருகியது. புரோச், காம்பே முதலிய துறைமுகங்களின் வழியாக உரோமானியப் பேரரசு, மேற்கு ஆசியா முதலிய வெளிநாடுகளுடன் கடல் வாணிகம் சிறப்புற நடைபெற்றது.

விக்கிரமாதித்தர் சிறந்த கல்விமான். எனவே, அவர் கற்றவர்களை மிகவும் ஆதரித்தார். அவருடைய அவையில் ஒன்பது சிறந்த அறிஞர்கள் இருந்தனர். அவர்களுக்கு நவரத்தினங்கள் என்று பெயர். அவர்களுள் முக்கிய மானவர் கவி காளிதாசர். அவர் பல நாடகங்களையும் காவியங்களையும் வடமொழியில் படைத்துள்ளார். அவற்றுள் சாகுந்தலம் என்னும் நாடகம் உலகப் புகழ் பெற்றது.

விக்கிரமாதித்தர் காலத்தில் பாஹியான் என்னும் சீனப் பயணி இந்தியாவிற்கு வந்தார். அவர் ஒரு பௌத்தத் துறவி. பௌத்த புண்ணியத்

தலங்களைத் தரிசித்தார். பௌத்த நூல்களையும் புனிதச் சின்னங்களையும் சேகரித்தார். இவையே அவர் இந்திய வருகையின் நோக்கங்களாகும்.

பாஹியான் எழுதிய குறிப்புகளிலிருந்து குப்தர் ஆட்சியின் மாட்சிமை நாம் அறிய முடிகிறது. அக்கால மக்களின் வாழ்க்கையைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்கிறோம். அவர்தம் குறிப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

'குப்தர் ஆட்சி சிறப்பாக நடைபெற்றது. மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். திருடர் பயமின்றி மக்கள் எந்நேரத்திலும் எங்கும் வழிப்பயணம் செய்தனர். வாணிகம் சிறப்பாகத் தழைத்தோங்கியது. இந்து மதம் மறுமலர்ச்சி பெற்றது.'

## பயிற்சி

**I. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைத் தகுந்த விடை கொண்டு நிரப்புக**

(1) இரண்டாம் சந்திரகுப்தர் சாகர்களை வென்றதால், அவருக்கு ஏற்பட்ட புகழ்ப் பெயர் __________.

(2) போராற்றல் மிக்க அவருக்கு வழங்கிவரும் மற்றொரு சிறப்புப் பெயர் __________.

(3) அவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப் பயணி __________ ஆவார்.

(4) சாகுந்தலத்தை எழுதிய கவிஞர் __________.

**II. விடைகள் தருக**

(1) பாஹியான் ஏன் இந்தியாவிற்கு வந்தார்?

(2) அவர் குப்தர்கள் ஆட்சியைப்பற்றி எழுதிவைத்த குறிப்பு யாது?

(3) காளிதாசரைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

# 5. ஹர்ஷவர்த்தனர்

குழந்தைகளே, சென்ற பாடத்தில் குப்த வமிசத்துத் தலைசிறந்த மன்னர்களில் ஒருவரான இரண்டாம் சந்திரகுப்தரைப்பற்றித் தெரிந்துகொண்டோம். இப்பாடத்தில் குப்தப் பேரரசின் அழிவிற்கு சுமார் ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின் வட இந்தியாவில் தோன்றிய தானேசுவர அரசின் தலைசிறந்த அரசர் ஹர்ஷவர்த்தனரைப் பற்றிப் படிப்போம்.

ஹர்ஷரின் தந்தை **பிரபாகரவர்த்தனர்**. இவர் **தானேசுவரம்** என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு வட இந்திய இராச்சியம் ஒன்றை அரசாண்டார். இவருக்கு ஹர்ஷரைத் தவிர, **இராஜ்யவர்த்தனர்** என்ற மூத்த புதல்வனும் இராஜ்யஸ்ரீ என்ற ஒரு புதல்வியும் இருந்தனர். மகள் இராஜ்யஸ்ரீ கன்னோசி மன்னர் **கிரகவர்மன் மௌகாரியை** மணந்தாள்.

பிரபாகரவர்த்தனர் இறந்தவுடன் இராஜ்யவர்த்தனர் அரியணை ஏறினார். அப்போது மாளவ மன்னன் தேவகுப்தன் என்பவன் இராஜ்யஸ்ரீயின் கணவரான கன்னோசி மன்னன் கிரகவர்மனைச் சதி செய்து கொன்றுவிட்டான். இராஜ்யஸ்ரீயையும் சிறைப்படுத்தினான். இருப்பினும், அவள் சிறையினின்றும் தப்பிவிட்டாள். விந்தியமலைக் காடுகளில் ஒளிந்துகொண்டாள்.



படம் 5. ஹர்ஷவர்த்தனர்

இச் செய்தி அறிந்த இராஜ்யவர்த்தனர் மாளவத்தின்மீது படையெடுத்து அதனை வென்றார். திரும்பி நாட்டிற்கு வருகையில் வங்க மன்னர் சசாங்கரால் அவர் கொல்லப்பட்டார். எனவே, இரண்டாம் புதல்வரான ஹர்ஷர் தாமே தானேசுவர அரசராக வேண்டிவந்தது.

ஹர்ஷர் பட்டத்துக்கு வந்தவுடன் தம் சகோதரி இராஜ்யஸ்ரீயைத் தேடிச் சென்றார். அவள் தீயில் விழுந்து இறக்க இருக்கும் தருவாயில், அவளைக் கண்டு காப்பாற்றினார். அவளது விருப்பப்படி கன்னோசியின் ஆட்சிப் பொறுப்பையும் ஹர்ஷர் ஏற்றுக்கொண்டார். பின்னர் மாளவம், கூர்ச்சரம் முதலிய நாடுகளையும் அவர் கைப்பற்றினார். கன்னோசியைத் தம் பேரரசின் தலைநகரமாக்கினார்.

**ஹர்ஷர் தென்னிந்தியாவையும் வெல்லக் கருதினார். எனவே, ஒரு படையுடன் தெற்கு நோக்கிச் சென்றார். ஆனால் அவர் எண்ணம் கைகூட**

வில்லை. அப்போது தக்காணத்தில் வலிமை பெற்றுச் சிறந்த மேலைச் சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசி என்பவர் அவரை நர்மதை ஆற்றங் கரையில் தடுத்து நிறுத்தி எதிர்த்தார். இப்போரில் ஹர்ஷர் தோல்வி யடைந்தார். புலிகேசியுடன் சமாதானம் செய்துகொண்டார். அதன்படி ஹர்ஷப் பேரரசின் தெற்கு எல்லையாக நருமதை ஆறு ஒப்புக்கொள்ளப் பட்டது.

ஹர்ஷர் ஆட்சியின்போது **யுவான் சுவாங்** என்னும் சீன பௌத்த பயணித் துறவி இந்நாட்டிற்கு வந்தார். அவர் தாம் பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் தம் குறிப்புகளில் எழுதியுள்ளார். அவை ஹர்ஷர் காலத் தைப்பற்றிய இந்தியாவின் நிலைமையை அறிய நமக்கு உதவுகின்றன.

ஹர்ஷர் மக்கள நலனில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். மக்களின் குறைகளைத் தாமே நேரில் கண்டு, கேட்டு, அறிந்து அவற்றைப் போக்கினார். அவர் காலத்தில் வரிகள் குறைவாக விதிக்கப்பட்டன. ஆனால், குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பயணிகளின் வசதிக்காக நெடுஞ்சாலைகளும் அவற்றின் ஓரங்களில் சத்திரங்களும் அமைக்கப்பட்டன. கன்னோசி செல்வச் செழிப்பு மிக்க நகராக விளங்கியது.

ஹர்ஷர் சிறக்கக் கற்றவர். அவர் வடமொழியில் **நாகானந்தம், இரத்தினாவளி, பிரியதர்சிகா** என்னும் நூல்களை இயற்றினார். அவருடைய அவையைப் **பாணர்** என்ற புலவர் அலங்கரித்தார். அவர் **ஹர்ஷ சரிதம், காதம்பரி** என்ற சிறந்த வடமொழி நூல்களைப் படைத்தார். அவர் காலத்தில் **நாளந்தா பல்கலைக்கழகம்** சிறப்புற்று விளங்கியது. இக் கழகம் குப்த மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. ஹர்ஷர் காலத்தில் ஆசியாவின் பல நாடுகளிலிருந்தும் மாணாக்கர்கள் இங்கு வந்து கல்வி கற்றுச் சென்றனர்.

ஹர்ஷரும் அசோகரைப்போல புத்த சமயத்தைத் தழுவினார். ஆனால், பிற மதப் பகையின்றி சமயப் பொறுமையுடையவராகத் திகழ்ந்தார். அவர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை **பிரயாகையில்** பெருவிழா ஒன்றைக் கொண்டாடினார். இவ்விழாவில் எல்லாச் சமயத்தினரும் கலந்து கொண்டனர். அப்போது மன்னர் ஏழை எளியோர்க்கும் எல்லாச் சமயத் தலைவர்களுக்கும் தமது செல்வம் முழுவதையும் தானமாக வாரி வாரி வழங்கினார்.

**தமக்கென வாழாது மக்கட்கென வாழ்ந்த இச் சிறந்த அரசர் 42 ஆண்டுகள் சிறப்புடன் தம் நாட்டை ஆட்சி செய்தார்.**

## பயிற்சி

I. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிரப்புக

(1) ஹர்ஷர் இயற்றிய நூல்கள்__________.
(2) ஹர்ஷர் அவையை அலங்கரித்த புலவர்__________.
(3) ஹர்ஷரைத் தோற்கடித்த தென்னிந்திய மன்னர்__________.
(4) ஹர்ஷர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப் பயணி__________.

II. பின்வரும் வினாக்களுக்கு 5 முதல் 10 வரி வரையில் விடை தருக

(1) ஹர்ஷர் எவ்வாறு கன்னோசி மன்னரானார்?
(2) ஹர்ஷரின் தக்காணப் படையெடுப்பு ஏன் வெற்றிபெறவில்லை?
(3) ஹர்ஷர் சிறந்த கல்விமான் என்பதை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக.

# 6. நரசிம்ம பல்லவர்

சுமார் 1,300 ஆண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில் பல்லவர்கள் சிறப்பாக ஆட்சி புரிந்துவந்தனர். இவர்களுடைய நாடு கிருஷ்ணா ஆறு முதல் காவிரி ஆறு வரை பரவியிருந்தது. பல்லவ நாட்டின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும்.

பல்லவ அரசர்களில் பெரும் புகழும் பெற்ற ஒரு சிறந்த அரசர் நரசிம்ம பல்லவர் ஆவார். இவர் மகேந்திரவர்ம பல்லவரின் புதல்வர். மகேந்திரருக்குப் பின் அரியணை ஏறினார். சிறுவயதிலேயே பல மல்லர்களை வென்றதால் இவருக்கு மாமல்லர் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.



படம் 6 நரசிம்ம பல்லவர்

நரசிம்மவர்ம பல்லவர் ஒரு சிறந்த வீரர். பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் நீண்ட காலமாகப் பகையிருந்தது தமது தந்தையாரைப் போரில் தோற்கடித்த இரண்டாம் புலிகேசி என்ற சாளுக்கிய மன்னரை, நரசிம்மபல்லவர் தோற்கடித்தார். போரில் சாளுக்கிய மன்னர் இறந்தார். அவருடைய தலைநகரமாகிய வாதாபி அழிக்கப்பட்டது. எனவே, நரசிம்ம பல்லவருக்கு வாதாபி கொண்டான் என்ற புகழ்ப் பெயர் ஏற்பட்டது.

நரசிம்ம பல்லவர் சேர, பாண்டிய மன்னர்களையும் போரில் வென்றார். அவரிடம் பலம்மிக்க கப்பற்படை இருந்தது. அதனைக் கொண்டு இலங்கையின் மீது படையெடுத்து அரியணை இழந்த தமது நண்பரான இலங்கை மன்னர் மானவர்மரை மீண்டும் இலங்கை அரசராக்கினார்.

நரசிம்மவர்மர் மாமல்லபுரம் என்ற கடற்கரைப் பட்டினத்தைச் சிறப்பான ஒரு கலைநகரமாகச் செய்தார். அங்கே அவர் பாறைகளைக் குடைந்தும் செதுக்கியும், பல அழகிய கோவில்களையும் மண்டபங்களையும் கட்டுவித்தார். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. அவற்றுள் பஞ்சபாண்டவர் இரதங்கள், பகீரதன் தவம் என்பவை மிக அழகாக அமைந்துள்ளன. இவற்றைக் காண வெளிநாட்டவரும் வருகின்றனர்.

நரசிம்மவர்ம பல்லவர் காலத்தில் நாடு செழிப்புற்று விளங்கியது. விவசாயம், வாணிகம், கல்வி, கலை, கைத்தொழில்கள் முதலியன மேம்பாட்டுடன் விளங்கின. காஞ்சியில் பல கல்வி நிலையங்கள் புகழ்பெற்று விளங்கின. காஞ்சியிலும் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. பல அரிய நூல்கள்

இவர் காலத்தில் எழுதப்பெற்றன. பாரவி, தண்டி போன்ற கல்விமான்கள் இவர் காலத்தில் இருந்தனர்.

நரசிம்மவர்மர் காலத்தில் யுவான்சுவாங் என்னும் சீனப்பயணி காஞ்சிக்கு வருகை தந்தார். அவர் எழுதிய சியூகி என்னும் நூலின் குறிப்புகளிலிருந்து நாம் காஞ்சியின் பெருமையைப்பற்றி அறியலாம்.

## பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது சொற்றொடரில் விடை தருக

(1) பல்லவர்களின் தலைநகரம் யாது?
(2) பல்லவர்களின் புகழ்பெற்ற துறைமுகம் யாது?
(3) நரசிம்ம பல்லவரால் 'வாதாபி' போரில் தோற்கடிக்கப்பட்ட மன்னர் யார்? அவர் எவ்வம்சத்தைச் சேர்ந்தவர்?
(4) நரசிம்மவர்மர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகர் யார்?

II. பின்வரும் வினாக்களுக்கு 5 வரி முதல் 10 வரிகளுக்குள் விடை தருக

(1) மாமல்லபுரத்தைப்பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.
(2) சிறந்த பல்லவ மன்னர்களுள் ஒருவராக நரசிம்ம பல்லவர் ஏன் கருதப்படுகிறார்?

# 7. இராஜராஜ சோழர்

பல்லவர்களுக்குப் பின் தென்னிந்தியாவில் புகழுடன் ஆட்சி புரிந்தவர்கள் **பேரரசு சோழர்கள்** ஆவர். இவர்களைப் **பிற்காலச் சோழர்கள்** எனவும் வழங்குவர். இவர்கள் முதலில் தஞ்சையிலிருந்தும் பிறகு கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்தும் அரசாண்டனர்.



படம் 7. இராஜராஜ சோழர்

பேரரசு சோழர் ஆட்சியை நிறுவியவர் **விஜயாலயர்** என்பவர். இவர்களில் புகழ்மிக்கவர்கள் **இராஜராஜ சோழரும்** அவர் மைந்தர் **இராஜேந்திர சோழரும்** ஆவர்.

இளம் வயதில் இராஜராஜர் தம் பெற்றோர்களை இழந்தார். தமக்கை குந்தவைப்பிராட்டியின் அன்பிலும் ஆதரவிலும் வளர்ந்தார்.

இராஜராஜர் மிகச் சிறந்த வெற்றி வீரராக விளங்கினார். இலங்கைமீது படையெடுத்து அதன் ஒரு பகுதியை வென்றார். மேலும் அநேக நாடுகளை வென்றார். இராஜராஜரின் பேரரசு வடக்கே துங்கபத்திரை நதியிலிருந்து தெற்கே இலங்கை வரையிலும் பரவியிருந்தது.

இராஜராஜர் காலத்தில் விவசாயம், வாணிகம், கைத்தொழில் முதலியவை ஏற்றம் பெற்றன. இராஜராஜர் கல்வியை வளர்த்தார். சிற்ப, ஓவியக் கலைகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தார்.

இராஜராஜர் சிவபெருமானிடத்தில் பேரன்பு கொண்டவர். தஞ்சாவூரிலுள்ள **பிரகதீசுவரர் ஆலயம்** என்னும் பெரிய கோயிலைக் கட்டினார். சோழர்காலக் கட்டடக் கலை, சிற்பக்கலை இவற்றின் பெருமைக்கு இக்கோயில் ஒரு சிறந்த சான்றாகும். இக் கோயிலுக்கு அவர் ஏராளமான செல்வத்தை அளித்தார். தேவாரப் பாடல்களைத் தொகுப்பதற்கு ஏற்பாடு செய்தார். அவற்றைப் பாடுதற்கு ஓதுவார்களை நியமித்தார். அவர் சைவ சமயத்திற்குச் செய்திருக்கும் பணி மகத்தானது. இராஜராஜர் சைவ மதத்தை ஆதரித்தபோதிலும் பிற மதப் பகை காட்டவில்லை. அவற்றையும்

ஆதரித்தார். இவருக்கு 'மும்முடிச் சோழர், சிவபாத சேகரர்' என்ற விருதும் பெயர்களும் உண்டு.

## பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது சொற்றொடரில் விடை தருக

(1) பேரரசு சோழர்களின் ஆட்சியை நிறுவியவர் யார்?
(2) இராஜராஜரின் விருதுப் பெயர்கள் யாவை?

II. பின்வரும் வினாக்களுக்கு 5 முதல் 10 வரி வரை விடை தருக

(1) பிரகதீசுவரர் ஆலயத்தைப்பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.
(2) ஏன் இராஜராஜ சோழர் தலைசிறந்த தென்னிந்திய மன்னராகக் கருதப்படுகிறார்?

# 8. கோரி முகமது

குழந்தைகளே, இந்தப் பாடத்தில் முஸ்லிம் நாடான ஆப்கனிஸ்தானத்தில் இருந்த கோர் என்னும் ஒரு சிறிய மலை அரசின் தலைவர் முகம்மது கோரி எவ்வாறு இந்தியாவில் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார் என்பதைக் காண்போம்.

சுமார் 960 ஆண்டுகளுக்கு முன் ஆப்கனிஸ்தானத்தில் உள்ள கஜினியை ஆண்ட முகம்மது கஜினி இந்தியாவின் மீது பல தடவைகள் படையெடுத்து, நாட்டின் செல்வத்தை கஜனிக்கு எடுத்துச் சென்றார். அவரது மரணத்திற்குப் பின்னர் கோர் அரசு சிறப்பு எய்தியது. அதன் மன்னரான கோரி முகம்மது இந்தியாவில் ஒரு முஸ்லிம் இராஜ்யத்தை அமைக்க விரும்பினார். இவர் துருக்கிய இனத்தைச் சேர்ந்தவர்.



படம் 8. கோரி முகமது

முகம்மது கோரி மிகச் சிறந்த வீரர். அவர் முதலில் இந்தியாவின் மீது படையெடுத்துச் சில பகுதிகளை வென்றார். பின்பு இந்தியாவின் உட்பிரதேசத்தில் படையெடுத்தார். அப்போது டில்லி, ஆஜ்மீர் ஆகியவற்றைப் பிரிதிவிராஜர் என்ற இராஜ புத்திர அரசர் ஆண்டுவந்தார். கன்னோசி ராஜ்யத்தை ஜெயச்சந்திரர் என்ற இராஜ புத்ர அரசர் ஆண்டுவந்தார். ஜெயச்சந்திரரின் மகள் சம்யுக்தையை பிரிதிவிராஜர் அவரது விருப்பத்திற்கு மாறாக மணந்து கொண்டதனால் இவ்விரு இராஜபுத்ர மன்னரிடையேயும் பகைமை வளர்ந்திருந்தது. முகம்மது கோரி டில்லியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு படையெடுத்தபோது பிரிதிவிராஜர் அவரை எதிர்த்தார். ஆனால் அவரது உதவிக்கு ஜெயச்சந்திரர் வரவில்லை. எனவே, தரெய்ன் என்ற சமவெளியில் நடந்த சண்டையில் முதலில் முகம்மது தோற்றாலும் தளராமல் மீண்டும் படையெடுத்து இரண்டாம் முறை நடந்த சண்டையில் பிரிதிவியை அவர் தோற்கடித்து வெற்றிபெற்றார். டில்லியும் ஆஜ்மீரும் அவரது ஆதிக்கத்தின் கீழ் வந்தன. அதன் பின்னர் கோரி முகம்மது ஜெயச்சந்திரரையும் வென்று அவரது கன்னோசி இராஜ்யத்தையும் கைப்பற்றினார். அடுத்து பீகாரும் வங்காளமும் கோரியின் படைகளுக்குப் பணிந்தன.

வெற்றி வீரரான முகம்மது கோரி கோர் நாட்டிற்குச் செல்லும் போது வழியில் கொல்லப்பட்டார். இந்தியாவிலிருந்து அவர் வென்ற இந்தியப் பகுதிகளை ஆட்சி செய்ய டில்லியில் அவருடைய சிறந்த படைத் தலைவரான குத்புதீன் ஓர் அரசை அமைத்தார். இதுவே டில்லியில் தோன்றிய முதல் முஸ்லீம் அரசாகும். முகம்மது கோரி ஒரு நிலையான முஸ்லிம் அரசு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தபடியால் அவர் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெறுகிறார்.

## பயிற்சி

**I. பின்வரும் வாக்கியங்களிலுள்ள கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிரப்புக**

(1) கோரி முகம்மதுவை எதிர்த்த முதல் இராசபுத்திர அரசர் ____________.

(2) கோரி முகம்மதுவுக்கும் பிரிதிவிராஜருக்கும் ____________ என்ற இடத்தில் போர் நடந்தது.

**II. பின்வரும் வினாக்களுக்கு 5 வரி முதல் 10 வரிகள் வரை விடைகள் தருக**

(1) கோரி முகம்மது இந்தியாவில் பெற்ற வெற்றிகள் யாவை?

(2) கோரி முகம்மது இந்திய வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதற்குக் காரணம் யாது?

# 9. கிருஷ்ணதேவராயர்

முகமது கோரியின் படையெடுப்பால் டில்லியில் தோன்றிய முஸ்லிம் அரசு நாளடைவில் விரிவடைந்தது. அது தென்னிந்தியாவிலும் பரவத் தொடங்கியது. எனவே, தென்னிந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவாமல் தடுக்கவும் இந்து சமயத்தைப் பாதுகாக்கவும் விஜயநகர அரசு சுமார் 650 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டது. அரசின் தலைநகரான விஜயநகரத்தை ஹரிஹரர், புக்கர் என்னும் இரு சகோதரர்கள் துங்கபத்திரை ஆற்றின் தென் கரையில் தோற்றுவித்தனர்.



படம் 9. கிருஷ்ணதேவராயர்

விஜயநகர அரசை ஆண்ட மன்னர்களுள் புகழ்மிக்கவர் கிருஷ்ண தேவராயர் ஆவார். இவர் விஜய நகரத்திற்கு வடக்கில் இருந்த பீஜப்பூர் சுல்தானைப் போரில் தோற்கடித்தார். அவரிடமிருந்து துங்கபத்திரை ஆற்றுக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடையேயுள்ள நிலப் பகுதியாகிய ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைக் கைப்பற்றினார். தென்னிந்தியா முழுவதும் அவர் ஆட்சியின்கீழ் வந்தது.

திம்மரசு என்னும் அப்பாஜி என்பவர் கிருஷ்ணதேவராயரின் அமைச்சராகப் பணிபுரிந்தார். அவர் சிறந்த அறிஞர். அவரது உதவியால் கிருஷ்ணதேவராயர் நேர்மையாகவும் நீதிதவறாமலும் அரசாண்டார்.

கிருஷ்ணதேவராயர் விஜயநகர நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கினார். குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் முதலியவற்றை வெட்டுவித்தார். இராமசுவாமி கோவில், விட்டல்சாமி கோவில் போன்ற பல ஆலயங்கள் எழுப்பினார். இவ்வாறு தெய்வத் திருப்பணியிலும் அவர் சிறந்து விளங்கினார். விஜயநகரத்தை அழகுமிக்க நகரமாக்கினார். அங்கு வானளாவும் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் காட்சியளித்தன. கிருஷ்ணதேவராயர் போர்ச்சுகீசியர்களைத் தம் இராச்சியத்தில் வியாபாரம்

செய்ய அனுமதித்தார். அதனால் நாட்டின் வியாபாரம் வளர்ச்சியடைந்தது; செல்வமும் மிகுந்தது.

தெய்வபக்தி மிகுந்த கிருஷ்ணதேவராயர் மிகச் சிறந்த கல்விமான். அவர் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் வல்லவர். அம் மொழிகளில் சிறந்த சில நூல்களையும் எழுதினார். அவரது அவையில் அஷ்டதிக்கஜங்கள் என்று புகழ்பெற்ற எட்டு பேரறிஞர்கள் இருந்தனர். அவர்களுள் அல்லசானி பெத்தண்ணாவும் திம்மண்ணாவும் முக்கியமானவர்கள்.

சீரோடும் சிறப்போடும் ஆண்ட கிருஷ்ணதேவராயருக்குப் பின் விஜயநகர சாம்ராஜ்யம் சரிந்தது. அவருக்குப் பின்வந்த அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர். தலைக்கோட்டை என்ற இடத்தில் நடந்த போரில் தக்காணத்திலிருந்த சுல்தான்கள் விஜயநகர மன்னரைத் தோற்கடித்து அந்நகரையும் அழித்தனர். விஜயநகர அரசின் அழிந்த சின்னங்களை ஹம்பி என்னும் இடத்தில் நாம் இன்றும் காணலாம். மறக்கப்பட்ட பேரரசின் பெருமைக்கு அவை இன்றும் சான்று பகர்கின்றன.

## பயிற்சி

I. கீழ்க்கண்டவற்றிற்கு ஒரு சொல் அல்லது சொற்றொடரில் விடை தருக

(1) விஜயநகரத்தைத் தோற்றுவித்தவர்கள் யாவர் ?
(2) விஜயநகரப் பேரரசு எப்பொழுது, யாரால் அழிவுற்றது ?
(3) கிருஷ்ணதேவராயர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றிய முக்கிய இடம் யாது ?
(4) விஜயநகரப் பேரரசின் அழிவுச் சின்னங்கள் எங்கு காணப்படுகின்றன ?

II. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 5 முதல் 10 வரிகளில் விடை தருக

(1) விஜயநகரம் ஏன் தோற்றுவிக்கப்பெற்றது ?
(2) கிருஷ்ணதேவராயர் சிறந்த கல்விமான் என்பதற்கு உதாரணங்கள் கொடுக்கவும்.
(3) கிருஷ்ணதேவராயரின் ஆட்சிமுறையைப்பற்றி எழுதுக.

# 10. பாபர்

கோரி முகம்மது டில்லியில் நிறுவிய முஸ்லீம் அரசு துருக்கி ஆப்கானிய அரசு. அந்த அரசு டில்லியில் 300 ஆண்டுகள் ஆட்சி செய்து வீழ்ச்சி அடைந்தது. இவ்வாட்சிக் காலத்தை வரலாற்றில் டில்லி சுல்தான்களின் ஆட்சி என்கிறோம். அதன் பின்னர் மொகலாயர்கள் இந்தியாவை 250 ஆண்டுகள் ஆண்டனர்.

இந்தப் பாடத்தில் இந்தியாவில் மொகலாயப் பேரரசைத் தோற்றுவித்த ஒரு சிறந்த வீரரைப் பற்றிப் படிப்போம். அவர்தான் **பாபர்**. அவர் முதன் முதலில் ஆப்கனிஸ்தானத்தில் காபூலைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டுவந்தார். அப்போது டில்லியில் லோடி வம்சத்து சுல்தான்களின் ஆட்சி நடைபெற்று வந்தது. இவ்வம்சத்தின் கடைசி அரசர் **இப்ரஹீம் லோடி** ஆவார். அவர் பிரபுக்களை மதிக்கவில்லை. எனவே, பலர் அவருக்குப் பகைவராயினர். அவர்கள் பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு வேண்டினர்.



படம் 10. பாபர்

வீரமிக்க பாபர் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். டில்லியை நோக்கி ஒரு படையுடன் வந்தார். இப்ரஹீம் லோடியையும் அவரது படையையும் **பானிபட்** என்ற இடத்தில் தோற்கடித்தார். இது வரலாற்றில் **முதலாம் பானிபட் போர்** என்று அழைக்கப்படுகிறது. இப்போரில் தான் முதன்முறையாக இந்தியாவில் பீரங்கிப்படை உபயோகப்படுத்தப்பட்டது. அந்தப் பீரங்கிப் படையும் பாபரிடம்தான் இருந்தது. இவ்வாறு பாபரால் இந்தியாவில் முதன்முதல் மொகலாய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

டில்லியைக் கைப்பற்றிய பாபரை இராஜபுத்திரர்கள் **ராணா சங்கா** என்ற மாபெரும் வீரர் தலைமையில் எதிர்த்தனர். பாபர் அவர்களையும் தோற்கடித்தார். பின்னர் மாளவம், பீகார், வங்காளம் ஆகிய இராஜ்யங்களை ஆண்ட ஆப்கானிய மன்னர்களையும் வென்றார். இவ்வாறு வட இந்தியாவில் பெரும் பகுதி பாபரின் ஆட்சியின்கீழ் வந்தது.

பாபா என்னும் சொல்லுக்கு 'சிங்கம்' என்பது பொருள். தம் பெயருக்கு ஏற்ப அவர் அஞ்சா நெஞ்சினராய் விளங்கினார். நல்ல உடல் வலிமையும் விடாமுயற்சியும் உடையவராகத் திகழ்ந்தார். அன்பு, இரக்கம், சகிப்புத்தன்மை முதலிய நற்குணங்களும் அவரிடத்திலிருந்தன. அவர் நிறைந்த கல்வியறிவு உடையவர். அவர் தம் சுய சரிதையைத் துருக்கி மொழியில் தாமே எழுதியுள்ளார்.

பாபர் நான்கு ஆண்டுகள்தான் ஆட்சி புரிந்தார். அவரது மரணம் ஒரு தியாக பக்திக் காவியமாகும். ஒருமுறை அவருடைய அருமை மகன் ஹுமாயூன் நோய்வாய்ப்பட்டார். மருத்துவர்கள் கைவிட்டுவிட்டனர். பாபர் இறைவனிடம் தம் உயிரை எடுத்துக்கொண்டு தம் ஒரே மகன் உயிரைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார். ஹுமாயூன் பிழைத்தார். பாபர் பிணிவாய்ப்பட்டு இறந்தார்.

இந்நிகழ்ச்சி நமக்கு பாரதியாரின் 'பக்தியினாலே இப்பாரினில் எய்திடும் மேன்மைகள் கோடி' என்ற பாடலின் உண்மையை நினைவுறுத்துகின்றது அல்லவா?

## பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது ஒரு சொற்றொடரில் விடை அளிக்கவும்

(1) இந்தியாவில் முதன்முதலில் முகலாய அரசைத் தோற்றுவித்தவர் யார்?
(2) பாபரைப் பானிபட் போரில் சந்தித்த இந்திய அரசர் யார்? அவர் எவ்வமிசத்தைச் சேர்ந்தவர்?
(3) பாபர் என்ற சொல்லின் பொருள் என்ன?

II. பின்வரும் வினாக்களுக்கு 5 வரிமுதல் 10 வரி வரையில் விடையளிக்கவும்

(1) பாபர் ஏன் இந்தியாவின்மீது படையெடுத்தார்?
(2) பாபரின் வெற்றிகள் யாவை?

# 11. மகா அக்பர்

குழந்தைகளே, சென்ற பாடத்தில் இந்தியாவில் முகலாய அரசைத் தோற்றுவித்த பாபரைப்பற்றிப் படித்தோமல்லவா? இந்தப் பாடத்தில் அதனை விரிவாக்கி, நிலை பெறச் செய்த அவரது பேரர் மகா அக்பரைப் பற்றிப் படிப்போம்.

அக்பரின் தந்தை **ஹுமாயூன்**. அவர் நாடிழந்து பாலைவனத்தில் திரிந்த போது, அமரக்கோட்டை என்னும் இடத்தில் அக்பர் பிறந்தார். ஹுமாயூன் தமது இராஜ்யத்தை மீண்டும் பெற்றார். அவர் இறந்தபோது அக்பர் 13 வயதுச் சிறுவர். **பைராம்கான்** என்பவர் அவருக்குப் பதிலாக ஆட்சியைக் கவனித்தார்.

டில்லியில் ஆண்ட ஆப்கானிய மன்னருக்கு ஹெமு என்னும் இந்து அமைச்சர் ஒருவர் இருந்தார். அவர் தாமே தாம் மன்னர் என்று கூறிக்கொண்டார். அதனால் டில்லியின்மீது அக்பர் படையெடுத்தார். அக்பரின் படைகளுக்கும், ஹெமுவின் படைகளுக்கும் இடையே பானிபட் என்ற இடத்தில் போர் நடந்தது.



படம் 11. மகா அக்பர்

இது **இரண்டாம் பானிபட் போர்** என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது. இதில் அக்பர் வெற்றியடைந்தார். இதன் மூலம் முகலாய அரசு டில்லியில் நிலை பெற்றது. விரைவில் ஆக்ராவும் அக்பர் வசமாயிற்று.

அக்பரும் தம் பாட்டனாரைப்போலப் பேராற்றலும் போராற்றலும் உடையவர். படிப்படியாகப் பல போர்களை நிகழ்த்தி, இந்தியாவின் பல பகுதிகளை அவர் கைப்பற்றினார். அவர் செய்த போர்களில் அவர் மேவார் நாட்டைக் கைப்பற்றச் செய்த போர் முக்கியமானதாகும். அதன் தலைநகரான சித்தூரைத் தாக்கி அதை அக்பர் கைப்பற்றினார். அதன் இராஜபுத்ர மன்னர் தப்பிச்சென்று உதயபுரியில் மீண்டும் தம் அதிகாரத்தை நிறுவினார். இவர்தாம் **இராணா பிரதாப்சிங்** எனப்படுபவர். இவர் உதயபுரியிலிருந்து அக்பருக்கு மேலும் அடிக்கடி தொந்தரவு கொடுத்துக்கொண்டே வந்தார். இறுதியில் ஹல்டிகாட் என்ற இடத்தில் அக்பரின் படைத்தலைவரான **இராஜா மான்சிங்** அவரை வென்றார். ஆயினும் பிரதாப்சிங் அக்பருக்கு அடிபணியாமல் அரவல்லி மலைப் பகுதிகளில் வாழ்ந்துவந்தார்.

அக்பர் வட இந்தியாவிலுள்ள எல்லாப் பகுதிகளையும் வென்றார். இந்தியாவின் வட மேற்கேயுள்ள காபூல், காந்தகார் ஆகிய கேந்திர இடங்களையும் தம் பேரரசுடன் அவர் சேர்த்துக்கொண்டார்.

அக்பர் பின்னர் தக்காணத்தின் மீது தம் போர்ப்பார்வையைச் செலுத்தினார். அகமது நகர் அரசை முகலாயப் படைகள் தாக்கின. அதன் அரசி சாந்த் பீபீ தன்னாட்டைக் காக்க வீரத்துடன் போர் புரிந்தார். தாய் நாட்டைக் காக்கப் பெண்கள் தயங்கக் கூடாது என்பதற்கு அவர் ஓர் எடுத்துக் காட்டு. இருப்பினும், இராஜதந்திரத்தால் அக்பரால் அகமது நகர் அரசு வெல்லப்பட்டது. பின்னர் காண்டேஷும் பீராரும் வெல்லப்பட்டன. இவ்வாறு வட இந்தியா, காபூல், காண்டகார், தக்காணத்தின் சில பகுதிகள் அடங்கிய ஒரு பேரரசு அக்பரால் அமைக்கப்பட்டது. இப்பேரரசை அக்பர் நிர்வாகத்தின் பொருட்டு 15 சுபாக்களாகப் பிரித்தார். ஆட்சி சிறப்புடன் நடைபெற்றது.

அக்பர் வெறும் போர்வீரர் மட்டும் அல்லர். அவர் ஒரு சிறந்த தேசிய அரசர்: இந்நாட்டு எல்லா மக்களின் உதவியும் மதிப்பும் நட்பும் தமக்குத் தேவை என்பதை அவர் உணர்ந்தார். இந்துக்களுக்குத் தம்மரசில் அவர் உயர்ந்த பதவிகளைக் கொடுத்தார். மான்சிங், தோடர்மால் முதலியவர்கள் அவருடைய புகழ் பெற்ற நண்பர்கள், உதவியாளர்கள், தளபதிகள். அக்பர் இராசபுத்திரப் பெண்களைத் தாமும் மணந்து கொண்டார்; தம் புதல்வர்களுக்கும் மணம் செய்வித்தார். இந்துக்களின்மீது போடப்பட்டிருந்த 'ஜஸியா' என்ற வரியை அவர் நீக்கினார். இவ்வாறு இந்துக்களின் அன்பையும் இராச விசுவாசத்தையும் பெற்றார்.

அக்பர் அனைத்து மக்களும் தழுவும்படியான ஒரு புதிய மதத்தை உண்டாக்கினார். அதன் பெயர் 'தீன் இலாஹீ' என்பதாம். எல்லாச் சமயங்களின் நல்ல கொள்கைகளையும் திரட்டி, அக்பர் இப்புதிய சமயத்தை ஆரம்பித்தார். ஆனால் இம்மதம் அவருக்குப் பின் ஆதரவு இல்லாமல் விரைவில் மறைந்தது.

அக்பர் கட்டடக் கலையிலும் கவனம் செலுத்தினார். அவர் நிர்மாணித்த பதேபூர் சிக்ரி ஓர் அழகிய நகரமாகும்.

அக்பர் அறிஞர்களை ஆதரித்தார். அவரது அவையில் அபுல் பாசல் என்ற நூலாசிரியரும், தான்சேன் என்ற இசை மேதையும் இருந்தனர்.

சிறந்த வெற்றி வீரராகவும் நிர்வாகியாகவும் வரலாற்றில் அக்பர் ஓர் உன்னத இடம் பெற்றுள்ளார். முகலாயப் பேரரசைப் பெருமளவில் அவர் விரிவுபடுத்தினார். அவர் பரந்த மனப்பான்மையுடையவர். அவரது

மதச் சகிப்புத் தன்மை, அந்தக் காலத்தில் உலகத்தில் எந்த நாட்டிலும் எந்த அரசருக்கும் இருக்கவில்லை.

மகாத்மா காந்திஜியின் இந்து-முஸ்லீம் ஐக்கியத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்தவராகவும், தேசிய முஸ்லிம்களின் முன்னோடியாகவும் வரலாறு மகா அக்பரை மதிக்கிறது ; போற்றுகிறது.

## பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது சொற்றொடரில் விடை அளிக்கவும்

(1) அக்பர் ஹெமுவை எப்போரில் வென்றார் ?
(2) அக்பரை எதிர்த்த மேவார் நாட்டு மன்னர் யார் ?
(3) அக்பரைப் போரில் சந்தித்த வீராங்கனை யார் ?
(4) அக்பர் ஆரம்பித்த புதிய மதத்தின் பெயர் யாது ?
(5) அக்பர் அவையை அலங்கரித்த இசை மேதை யார் ?

II. பின்வரும் வினாக்களுக்கு 5 முதல் 10 வரிகளில் விடைகள் தருக

(1) அக்பர் உண்டாக்கிய புதிய மதம் எப்படிப்பட்டது ?
(2) அக்பரை ஏன் ஒரு தேசிய அரசராகக் கருதுகிறோம் ?

# 12. ஔரங்கசீப்

குழந்தைகளே, சென்ற பாடத்தில் தேசிய மன்னர் அக்பரைப் பற்றிப் படித்தீர்கள். இப்பாடத்தில் முகலாய வம்சத்தின் மற்றொரு மிகச் சிறந்த அரசரைப் பற்றிப் படிப்போம். அவர்தான் ஔரங்கசீப்.

ஔரங்கசீப் முகலாய மன்னர் அக்பரின் பேரரான ஷாஜஹானின் புதல்வர். ஆற்றலும் தந்திரமும் மிக்க அவர் தம் சகோதரர்களையெல்லாம் வென்று டில்லியின் அரசரானார். ஏற்கெனவே தக்காணத்தில் தம் தந்தையின் அரசப் பிரதிநிதியாகப் பதவி வகித்ததால் அவருக்கு நிர்வாக அனுபவமும் இருந்தது.



படம் 12. ஔரங்கசீப்

ஔரங்கசீபிற்கு ஆலம்கீர் (உலகத்தை வென்றவர்) என்ற பட்டப் பெயரும் அவர் தந்தையால் அளிக்கப்பட்டது. அவர் விசுவாசமுள்ள உண்மையான முஸ்லீம். இஸ்லாம் சமயம் பரவ ஆர்வம் காட்டினார். இத்தன்மையில் அவர் எல்லாச் சமயத்தையும் மதித்த அக்பருக்கு நேர் மாறானவர். எனவே, அவர் பிற சமயத்தினரைச் சரியாக நடத்தவில்லை. இந்துக்கள் மீது அக்பர் காலத்தில் ரத்து செய்யப்பட்ட 'ஜஸியா' என்ற வரியை மீண்டும் விதித்தார். காசி விஸ்வநாதர் ஆலயம் அழிக்கப்பட்டது. தம் ஆழ்ந்த சமயப் பற்றால் ஔரங்கசீப் பிற சமயத்தினரின் உதவியை இழந்தார். பகையைச் சம்பாதித்துக் கொண்டார். இதனால் முகலாயப் பேரரசின் அழிவிற்கும் உதவினார் எனச் சிலர் கருதுகின்றனர்.

ஔரங்கசீப் காலத்தில் வீர சிவாஜியின் தலைமையில் மராட்டிய் அரசு உருவாயிற்று. தமக்குத் தொல்லை கொடுத்த சிவாஜியை அடக்க அவர் முயன்றார். ஆனால் தோல்வி அடைந்தார்.

ஔரங்கசீப் தக்காணத்தில் தம் ஆட்சியின்கீழ் இதுவரை வராதிருந்த பீஜப்பூர், கோல்கொண்டா ராஜ்ஜியங்களைத் தாக்கித் தம் வசப்படுத்திக் கொண்டார். இதனால் முகலாயப் பேரரசு தெற்கில் வடபெண்ணை ஆறு வரையில் பரவியது.

தமது 88ஆவது வயதில் ஔரங்கசீப் அகமது நகர் திரும்பும் வழியில் இறந்தார். அவர் மரணம் அடையும்போது கூறிய வார்த்தைகள் போற்றத் தக்கன. அவர் சொன்னார், ''நான் பெரும் பாவம் செய்து விட்டேன். எனக்கு என்ன சித்ரவதைகள் காத்திருக்கின்றனவோ தெரியாது. உங்கள் அனைவரையும் உங்கள் குழந்தைகளையும் ஆண்டவனிடம் ஒப்படைத்து, உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். ஆண்டவனின் அமைதி உங்களுக்குக் கிட்டட்டும்''.

## பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது சொற்றொடரில் பதில் கூறுக

(1) ஔரங்கசீபின் தந்தை யார்?

(2) ஔரங்கசீப் இறுதியாக வென்ற தக்காண அரசுகள் யாவை?

II. பின்வரும் வினாக்களுக்கு 5 முதல் 10 வரி வரை விடைகள் தருக

(1) ஔரங்கசீப் இந்துக்களை எவ்வாறு நடத்தினார்?

(2) ஔரங்கசீபின் குணநலன்களைக் கூறுக.

# 13. வீர சிவாஜி

குழந்தைகளே, இப்பாடத்தில் மகாராட்டிர நாட்டில் தோன்றிப் புகழ் பெற்ற ஒரு மாவீரரைப்பற்றிப் படிப்போம். அவர் யார் தெரியுமா? அவர்தான் **வீர சிவாஜி.**

சிவாஜி இந்திய நாட்டின் பெரும் தேசிய வீரர். பலம் பொருந்திய மொகலாய மன்னரான ஔரங்கசீபை எதிர்த்து ஒரு மராட்டிய அரசை நிறுவியவர்; இந்திய வரலாற்றில் அழியா இடம் பெற்றவர்.

சிவாஜியின் தந்தை **ஷாஜி பான்ஸ்லே.** அவருடைய தாயார் **ஜீஜிபாய்.** அவருடைய அன்பு ஆசான் **தாதாஜி கோண்டதேவ்.** அவர் தாயும் ஆசிரியரும், அவருக்கு 'ராமாயண', 'மகாபாரத' வீரர் களைப் பற்றிப் பல கதைகளைச் சொன்னார்கள். அதனால் சிவாஜியும் அவர்களைப்போல் ஆற்றல் மிக்க சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று விரும்பினார். அவருடைய சமயகுரு **சுவாமி இராமதாஸ்** ஆவார். அவரிடமிருந்து இந்து சமயத்தின் பெருமையை சிவாஜி அறிந்து கொண்டார். **பவானி** அவருடைய இஷ்ட தெய்வம்.



படம் 13. வீர சிவாஜி

அக்காலத்தே, இந்தியாவின் பெரும் பகுதி மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் ஆட்சியின் கீழ் இருந்தது. அவரது ஆட்சியில் இந்துக்கள் மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை என்று கருதி சிவாஜி இந்துக்களுக்கென மராட்டியப் பிரதேசத்தில் ஓர் அரசை ஏற்படுத்த விரும்பினார்.

மஹாராட்டிரப் பிரதேசம் குன்றுகள் நிறைந்தது. சிவாஜி தம்மை ஒத்த பலரை ஒன்றுதிரட்டி ஒரு படையை உருவாக்கினார். அவர்களுக்கு நல்ல போர்ப்பயிற்சியும் கொடுத்தார். மறைந்திருந்து திடீரென்று தாக்கும் **'கொரில்லாப் போர்'** முறையில் அவர்கள் சிறந்து விளங்கினர்.

இப்படையின் உதவியால் முதலில் சிவாஜி பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான பல கோட்டைகளைக் கைப்பற்றினார். இதனால் கோபமடைந்த பீஜப்பூர் சுல்தான் அவரை அடக்க **அப்ஸல்கான்** என்ற தளபதியை ஒரு படையுடன் அனுப்பினார். 'சிவாஜியை உயிருடன் பிடித்துவர வேண்டும்' என்று அப்ஸல்கானுக்குக் கட்டளையிடப்பட்டது. ஆனால் சிவாஜி அப்ஸல் கானைக் கொன்று மொகலாயப் படையைத் தோற்கடித்தார்.

சிவாஜியின் பலம் மேலும் மேலும் அதிகரித்தது. துணிச்சலுடன் அவர் முகலாய அரசர்களுக்கே தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தார். சிவாஜியை அடக்க ஔரங்கசீப் ஒரு பெரிய படையை அனுப்பினார். இப்படையின் தளபதி **ஷயிஸ்டகான்** என்பவர். சிவாஜி பிடிபடவில்லை. ஷயிஸ்டகான் தோல்வி கண்டார்.

ஔரங்கசீப் எப்படியாகிலும் சிவாஜியை அடக்க எண்ணினார். ஆக்ராவிற்கு விருந்தினராக அழைத்தார். அங்கு சென்ற சிவாஜிக்குச் சிறை விருந்துதான் கிடைத்தது. ஆனால் சிவாஜி மனம் தளரவில்லை. மிகவும் தந்திரசாலியான அவர், சிறையிலிருந்து ஒரு பழக்கூடையில் உட்கார்ந்து கொண்டு தப்பிவிட்டார்.

தந்நாடு திரும்பிய அவர் **ரெய்கார்** கோட்டையில் தம்மை மராட்டிய மன்னரென முடிசூட்டிக்கொண்டார்.

வீரமிக்க சிவாஜி நாட்டு நிர்வாகத்திலும் திறமை பெற்றிருந்தார். **அஷ்டப் பிரதான்** என்னும் தன் அமைச்சரவையின் உதவியால் மராட்டிய நாட்டைச் சிறப்புடன் எல்லோரும் போற்றும்படி ஆண்டார்.

இந்து மதத்தின் காவலராகவும், மராட்டிய தேசத்தின் சிற்பியாகவும், வலிமை மிக்க அரசின் நிறுவனராகவும் புகழ்பெற்ற சிவாஜி, தம் 53ஆவது வயதில் அமரரானார்.

**பயிற்சிகள்**

**I. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது ஒரு சொற்றொடரில் விடை கொடுக்கவும்**

(1) சிவாஜியின் தாயார் யார்?
(2) சிவாஜியின் சமயகுரு யார்?
(3) பீஜப்பூர் சுல்தான் சிவாஜியைப் பிடித்து வர அனுப்பிய தளபதி யார்?
(4) ஔரங்கசீபால் சிவாஜியை அடக்க அனுப்பப்பட்ட தளபதி யார்?
(5) சிவாஜி எங்கு முடிசூட்டிக்கொண்டார்?

**II. பின்வரும் வினாக்களுக்கு 5 வரி முதல் 10 வரிகளுக்குள் விடை தருக**

(1) சிவாஜிக்கு எவ்வாறு வீர உணர்ச்சி ஏற்பட்டது?
(2) சிவாஜியை அடக்க பீஜப்பூர் சுல்தான் செய்த முயற்சியை விவரி.
(3) ஔரங்கசீப் எவ்வாறு சிவாஜியை சிறைபிடிக்க விரும்பினார்? அதன் முடிவு என்ன?

# 14. இராபர்ட் கிளைவ்

தமது பதினெட்டாம் வயதில் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டார் இராபர்ட் கிளைவ். அப்போது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவோடு வாணிபம் செய்து வந்தது. இந்தியாவில் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பகுதிகளில் இந்தக் கம்பெனியின் வாணிபம் தழைத்தது. இந்தச் செயலகத்தில் வேலை செய்யும் குமாஸ்தாவாகவே இராபர்ட் கிளைவ் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டார். இங்கு வந்த கிளைவுக்கு குமாஸ்தா வேலை பிடிக்கவில்லை. படையில் சேர்ந்து கொண்டார். அப்போது நம் இந்திய நாட்டில் முகலாயர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அக்பர், ஔரங்கசீப் போன்ற பெருமை பெற்ற அரசர்கள் இல்லை. டில்லியில் ஆண்ட முகலாய அரசர்கள் வலிமை குன்றியிருந்தனர். எனவே அவருக்குக் கீழ் அரசைக் கவனித்து வந்த சுபேதார்கள் ஆங்காங்கே வலிமை பெற்று ஆட்சி செய்து வந்தனர். இவர்களில் வடக்கே வங்காளத்திலும், அயோத்தியிலும் ஆண்ட நவாபுகளும் தெற்கே ஹைதராபாத்தில் ஆண்ட நிஜாமும் முக்கியமானவர்கள். இந்த ஹைதராபாத் நிஜாமின்கீழ்த் தமிழ் நாட்டில் கர்நாடகத்தின் நவாப் ஆட்சி செய்தார். இந்திய மன்னர்களுள் ஒற்றுமையில்லை. எனவே இதைப் பயன்படுத்தி தென்னிந்தியாவில் வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் ஆதிக்கப் போட்டியில் இறங்கினர். கிளைவ் பிரிட்டிஷ் இந்தியக் கம்பெனியில் வேலை பார்த்த சமயம் ட்யூப்ளே என்பவர் பிரஞ்சுக்காரர்களின் கவர்னராகப் புதுச்சேரிக்கு வந்தார்.



படம் 14. இராபர்ட் கிளைவ்

அப்போது ஆர்க்காட்டு நவாப் இறந்தார். அவரது பதவிக்கு முகம்மதலி, சந்தாசாஹேப் என்பவர்கள் போட்டியிட்டனர். ஆங்கிலேயர் முகம்மதலி என்பவருக்கும் பிரஞ்சுக்காரர்கள் சந்தாசாஹேப் என்பவருக்கும் உதவி செய்வதாகக் கூறினர். முகம்மதலி திருச்சி மலைக் கோட்டையில் ஒளிந்து கொண்டார். திருச்சி முற்றுகையிடப்பட்டது. ஆனால் அப்போது சென்னையில் இருந்த கிளைவ் நவாப்பின் தலைநகரான ஆர்க்காடு பாதுகாப்பு

இல்லாமல் இருந்ததால் அதைப் பிடிக்க எண்ணினார். உடனே தமது சிறிய படையுடன் அந்த நகரைப் பிடித்துக் கொண்டார். தலைநகர் பிடிபட்டதால் சந்தாசஹேப் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் படைகளுடன் வந்தார். எனினும் கிளைவின் படை அவரைத் தோற்கடித்தது.

இவ்வாறு தமது சமயோசிதமான புத்தியினால் கிளைவ் ஆர்க்காட்டை பிடித்துக் கொண்டார். அவரை 'ஆர்க்காட்டு வீரர்' என அழைப்பார்கள். இதன்பின் கர்நாடகத்தில் (தமிழகத்தின் கிழக்குக் கரையில்) ஆங்கிலேயர்களின் அதிகாரம் வளர்ந்தது.

வங்காளத்தில் அப்போது சிராஜ் உத்தௌலா என்பவர் நவாபாக இருந்தார். எனவே கிளைவ் அவரது தளபதியான மீர்ஜாபர் என்பவரோடு ஓர் இரகசிய ஏற்பாடு செய்து கொண்டார். ஆங்கிலேயர்களின் படைகள் நவாபைத் தாக்கும். அப்போது மீர்ஜாபர் நவாபின் முக்கியமான படைகளோடு ஒதுங்கி விட வேண்டும். அதனால் கிளைவ் வெற்றி பெறுவார். இதன்படி பிளாசி என்னுமிடத்தில் ஆங்கிலப்படை நவாப்பைத் தாக்கியது. பெரும் பகுதிப் படையோடு மீர்ஜாபர் ஒதுங்கி விட்டார். நவாப் தோற்றார். கிளைவ் வெற்றி பெற்றார். தாம் சொன்னபடி மீர்ஜாபரை நவாப்பாக்கினார். மீர்ஜாபர் ஆங்கிலேயருக்குக் கல்கத்தாவைச் சுற்றியிருந்த 24 பர்க்கானாக்கள் என்ற பகுதியைக் கொடுத்தார். செழிப்பான அந்தப் பகுதியில் ஆங்கிலேயர் களின் இராச்சியம் வளரலாயிற்று. கிளைவ் இங்கிலாந்து சென்றார்.

இரண்டாண்டுகளுக்குப் பின் கிளைவ் திரும்பவும் வங்காளம் வந்தார். முகலாய அரசருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளில் வரி வசூலிக்கும் உரிமை பெற்றார். என்ன ஆச்சரியம்? சாதாரணமாக வியாபாரிகளாக இருந்தவர்கள் பத்து ஆண்டு காலத்திற்குள் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களின் சொந்தக் காரர்கள் போல் வரி வசூலிப்பதா? ஆம். அது கிளைவின் திறமை. நமது நாட்டு மக்களின் ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கத்தை நிறுவினார். ஆங்கிலப் பேரரசு இந்தியாவில் வளர்வதற்கு அவர் அடிகோலினார். அதுமுதல் சுமார் 200 ஆண்டுக்காலம் ஆங்கிலேயர்கள் நம்மை ஆட்சி செய்தனர்.

## பயிற்சி

(1) கர்நாடகத்தில் ஆங்கிலேயர்களோடு போட்டியிட்டவர்கள் யாவர்?

(2) கிளைவை ஏன் 'ஆர்க்காட்டு வீரர்' என்கிறோம்?

(3) பிளாசி வெற்றியில் ஆங்கிலேயருக்கு உதவியவர் யார்?

# 15. வீரபாண்டிய கட்டபொம்மன்

"ஆறு ஆண்டுகளாக நீங்கள் கப்பம் கட்டவில்லை. இப்போது எப்படியும் அதைக் கட்டிவிட வேண்டும். மற்றப் பாளையக்காரர்கள் எல்லோரும் கட்டி விட்டார்கள்." என்றான் ஆங்கிலேய அதிகாரி. "யார் நீங்கள்? நாடு எங்களுடையது; நிலம் எங்களுடையது; உங்களுக்கு நாங்கள் ஏன் வரிப்பணம் கொடுக்க வேண்டும்? கொடுக்க முடியாது" என்று முழங்கினான் வீரபாண்டிய கட்டப்பொம்மன்.



படம் 15.
வீரபாண்டிய கட்டபொம்மன்

யார் இந்தக் கட்டப்பொம்மன்? இந்திய அரசர்கள் எல்லாம் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டி வசதியாக வாழ்ந்து கொண்டிருந்தபோது அவன் மட்டும் கப்பம் கட்ட முடியாது என்றது ஏன்?

கெட்டி பொம்மு என்பவரின் வம்சத்தார் பாண்டிய இராச்சியத்தின் ஒரு பகுதியான அழகிய வீர பாண்டிய புரத்தை ஆட்சி செய்தனர். இந்தக் கெட்டி பொம்முவின் வழியில் வந்தவர்தான் வீரபாண்டிய கட்டபொம்மன்.

வீரபாண்டிய கட்டபொம்மன் திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலங் குறிச்சி என்ற இடத்தில் கோட்டை கட்டிக் கொண்டு ஆட்சி செய்தார். தென் தமிழகத்தில் சிற்றரசர்களிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை ஆர்க்காட்டு நவாப் ஆங்கிலேயருக்குக் கொடுத்திருந்தார். இந்த ஆங்கிலேயர்கள் சிறிது சிறிதாக இந்தியா முழுவதையும் பிடிக்க ஆசை கொண்டனர். எனவே கட்டபொம்மனையும் கப்பம் கட்டுமாறு கட்டளையிட்டனர். படை கொண்டு வந்து பாஞ்சாலங்குறிச்சியை அழித்து விடுவோமென்று பயமுறுத்தினார்கள். ஆயினும் கட்டபொம்மன் கப்பங்கட்ட ஒப்புக் கொள்ளவில்லை.

ஆங்கிலேய கலெக்டர் ஜாக்ஸன் இவர் மீது கோபங் கொண்டார். தன்னை வந்து பார்க்குமாறு கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினார். கட்டபொம்மன் தம் தளபதியோடும் தம்பி ஊமைத்துரையோடும், கலெக்டரைப் பார்க்கப் போனார். ஆனால் கலெக்டர், இவரை அவமதிப்பதற்காக, ஊர் ஊராக மாறி மாறிப் போய்க் கொண்டே இருந்தார். கடைசியில் இராமநாதபுரத்தில் ஜாக்ஸனைக் கட்டபொம்மன்

பார்த்தார். அப்போது கட்டபொம்மன் மீது கலெக்டர் குற்றம் சாட்டினார். அவரைக் கைது செய்ய முயன்றார். ஆனால் கட்டபொம்மன் வீரமாகப் போரிட்டார். பின்பு தமது நண்பர்களுடன் தப்பிச் சென்றார்.

கட்டபொம்மன் இருக்கும்வரை தாங்கள் தமிழகத்தில் ஆங்கில ஆட்சியை ஏற்படுத்துவது கடினமென்பதை ஆங்கிலேயர்கள் உணர்ந்து கொண்டார்கள். எப்படியாவது அவரது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பிடித்து விட எண்ணினர். பாஞ்சாலங்குறிச்சி மக்களும், படை வீரர்களும் திருவிழாவிற்காகத் திருச்செந்தூர் சென்றனர். அப்போது ஆங்கிலேயப் படை பாஞ்சாலக்குறிச்சியைத் தாக்கியது. கட்டபொம்மனின் படைகளின் முக்கியப் பகுதி கோட்டைக்கு வெளியே இருந்தது. உள்ளே இருந்த சில வீரர்களுடன் ஆங்கிலேயரை எதிர்த்தனர் கட்டபொம்மனும், அவரது சகோதரரும். தமது சொந்த தேசத்திற்காக அவரது வீரர்கள் கடைசி வரை போராடினார்கள். எனினும் ஆங்கிலேயர்கள் இடைவிடாது சுட்டுக் கொண்டேயிருந்ததால் கோட்டைச் சுவர்கள் சரிய ஆரம்பித்தன. தொடர்ந்து ஆங்கிலேயரோடு போராட தான் உயிருடன் கோட்டையை விட்டுத் தப்பிச் சென்றுவிட வேண்டுமென்று நினைத்தார். அதன்படி யாரும் அறியாதவாறு கோட்டையை விட்டு வெளியேறினார்.

அவர் தப்பித்ததை அறிந்த ஆங்கிலேயர்கள், அவருக்கு யாரும் உதவி செய்யக்கூடாது என்று அறிவித்தனர். அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஏராளமான பணமும், பரிசும் கொடுப்பதாக அதிகாரிகள் கூறினர். எட்டையாபுரத்தை ஆண்ட எட்டப்பர் ஆங்கிலேயரின் நண்பர். அவர் கட்டபொம்மன் கோலார்பட்டி என்ற ஊரில் தங்கியிருப்பதை அறிந்தார். ஆங்கிலப் படைக்குச் சொல்லியனுப்பினார். எட்டப்பரின் படைகளும், ஆங்கிலப் படையும் கோலார்பட்டி சென்றன. ஆயினும் கட்டபொம்மன் தப்பித்துச் சென்று விட்டார். அங்கிருந்து கட்டபொம்மன் புதுக்கோட்டை சென்றார். புதுக்கோட்டை மன்னன் விஜயரகுநாதத் தொண்டைமான் கட்டபொம்மனின் நண்பன். ஆனால் இப்போது ஆங்கிலேயரின் நண்பனாக மாறி விட்டான். கட்டப்பொம்மனைப் பிடித்துக் கொடுத்தால் தனக்கு அதிக நன்மைகள் கிடைக்குமென்று நம்பினான். எனவே கட்டபொம்மனிடம் அன்பாகப் பேசி தன்னிடம் சில நாள்கள் விருந்தினராகத் தங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அதே நேரத்தில் ஆங்கிலேயர்களுக்கு தன் அரண்மனையில் கட்டபொம்மன் இருப்பதாகச் செய்தி அனுப்பினான். ஆங்கிலேயப் படை விரைந்து வந்தது. உறங்கிக் கொண்டிருந்த கட்டபொம்மனை கைது செய்தது.

அங்கிருந்து கட்டபொம்மனை ஆங்கிலேயர்கள் கயத்தாறு என்னும் இடத்திற்குக் கொண்டு சென்றனர். அவர் மீது குற்றம் சாட்டினர். அவருக்குத் தூக்குத்தண்டனை விதித்தனர். அவர் தூக்கு மேடைக்குச்

செல்லும்போது இருபுறமும் ஆங்கிலேயருக்கு அடிபணிந்த பாளையக்காரர்கள் நின்று கொண்டிருந்தனர், அவர்களை வெறுப்புடன் பார்த்தவாறே தூக்குமேடைக்கு நடந்தார் கட்டபொம்மன்.

தாம் அரசர் ஆனது முதல் தூக்கிலிடப்பட்டது வரை சுமார் ஒன்பது ஆண்டுகள் ஆங்கிலேயருடன் போராடிய மகாவீரர் கட்டபொம்மன்.

பாஞ்சாலங்குறிச்சியில் தமிழக அரசு கட்டபொம்மனின் ஞாபகார்த்தமாக ஒரு கோட்டையைக் கட்டியுள்ளது. தினம் நூற்றுக் கணக்கான மக்கள் அதை பார்க்க வருகின்றனர். அவர் தூக்கிலிடப் பட்ட கயத்தாறில் தனி மனிதர்கள் முயற்சியால் கட்டபொம்மனின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. மதுரையில் பேருந்து நிலையத்தருகில் கட்டபொம்மன் சிலை உள்ளது.

## பயிற்சி

(1) கட்டபொம்மன் ஆட்சி செய்த இடம் எது?
(2) கட்டபொம்மன் ஏன் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்ட மறுத்தார்?
(3) கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தவர்கள் யார் யார்?
(4) அவர் எங்கே தூக்கிலிடப்பட்டார்?

# 16. ஜான்சி இராணி இலட்சுமிபாய்

'டுமீல்'. 'டுமீல்' வெடிச் சத்தம் காதைத்துளைக்கிறது. ஜான்சி கோட்டை மதில் மேல் ஏற்றப்பட்டுள்ள பீரங்கிகள் முழங்குகின்றன; குதிரை மேல் வீரர்கள் தளர்வடையும் இடத்திலெல்லாம் ஒரு குதிரை வீரன் சென்று உற்சாகப்படுத்துகிறான். அவன் செல்லுமிடமெல்லாம் ஜான்சி வீரர்கள் உற்சாகத்துடன் எதிரிப்படைகளை வீழ்த்துகிறார்கள். எதிர்த்து கோட்டையைத் தாக்கும் ஆங்கிலப் படைகள் சமாளிக்க முடியாமல் திணறுகின்றன. யார் இந்தக் குதிரை வீரன்? அதுதான் ஜான்சி இராணி இலட்சுமிபாய். ஆண் மகன் போல் உடையணிந்து, இடுப்பில் வாள் தொங்க குதிரையேறி ஜான்சி கோட்டையைக் காத்த வீராங்கனை.



படம் 16.
ஜான்சி இராணி இலட்சுமிபாய்

ஜான்சி இராச்சியம் மத்திய பாரதத்தில் உள்ளது. சுமார் 130 ஆண்டுகளுக்கு முன் அதை கங்காதரராவ் என்பவர் ஆட்சி செய்து வந்தார். கங்காதரராவின் மனைவியே இராணி இலட்சுமிபாய். கங்காதரராவுக்கும் இராணி இலட்சுமிபாய்க்கும் குழந்தைகள் இல்லை. இருவரும் மிகவும் வருந்தினர். அரசர் கங்காதரராவ் நோயுற்றார். எனவே தாமோதரராவ் என்ற ஐந்து வயது சிறுவனைத் தத்து எடுத்துக்கொண்டார். இன்றைக்கு நூற்று இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன் இது நடந்தது.

அப்போது இந்தியாவின் பெரும்பகுதி ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வசம் இருந்தது. டல்ஹௌசி பிரபு ஆங்கிலேய கவர்னர் ஜெனரலாக ஆட்சி செய்து வந்தார். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இராச்சியம் விரிவடைய வேண்டுமென்று விரும்பினார். எனவே குழந்தைகள் இல்லாத இந்திய அரசர்களின் இராச்சியங்கள் எல்லாம் ஆங்கிலேயர்களுக்கே சேரவேண்டுமென்று அறிவித்தார். அரசர்கள் குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொண்டால் அதை அங்கீகரிக்க முடியாது என்று அறிவித்தார். இதை எதிர்ப்பதற்கு இந்திய அரசர்களுக்கு தைரியம் இல்லை. ஜான்சி அரசர் கங்காதரர் தாம் தத்து எடுத்ததை ஆங்கிலேயருக்கு எழுதினார். தம் தத்துப் புத்திரனை தமக்குப் பின் ஜான்சி அரசராக அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஆங்கிலேயர்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அந்த ஆண்டு கங்காதரர் ராவ் இறந்தார். அப்போது இராணி இலட்சுமிபாய்க்கு பதினெட்டு வயது தான்; எனினும் ஆங்கிலேயர்கள் இராணியைக் கட்டாயப்படுத்தி கோட்டையை விட்டு வெளியேற்றி, ஜான்சி நகரத்தில் இருந்த அரண்மனையில் சென்று வசிக்குமாறு செய்தனர். இவ்வாறு நான்காண்டுகள் சென்றன. 1857-ம் ஆண்டு பிறந்தது. முதல் சுதந்திரப்போர் தொடங்கியது. ஐரோப்பிய முறையில் போர்ப்பயிற்சி பெற்ற இந்தியப்படை வீரர்கள் ஆங்கிலேயரை எதிர்க்க ஆரம்பித்தனர். இவர்கள் சிப்பாய்கள் என அழைக்கப்பட்டனர் சிப்பாய்கள் கலகம் செய்தனர். ஆங்காங்கே பல ஊர்களைப் பிடித்துக் கொண்டனர். அவ்வாறு ஜான்சி கோட்டையையும் ஆங்கிலேயரிடமிருந்து பிடித்துக்கொண்டனர். சுதந்திரப்போரில் இலட்சுமிபாய் பங்கெடுத்தார். கோட்டைக்குள் சென்று, ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார். இது பொறுக்குமா ஆங்கிலேயருக்கு? பெரும்படையுடன் ஜான்சியைத் தாக்கிப் பிடிக்க வந்தனர். அப்போதுதான் ஆணுடை தரித்து இலட்சுமிபாய் வீரர்களோடு ஒரு வீராங்கனையாய் போரிட்டார். அவருக்கு மாவீரன் **தாந்தியாதோபே** மராத்திக் சேனையுடன் உதவ முன்வந்தார். வழியிலேயே அவர் ஆங்கிலேயப் படையிடம் தோற்றார். எனினும் இராணி தைரியத்தை இழக்கவில்லை. தமது வீரர்களை உற்சாகப்படுத்தினார். நாள்கள் வாரங்களாயின. கோட்டையில் வீரர்களுக்கு உணவும் ஆயுதமும் குறைந்தது. ஆனால் அவர்கள் வீரம் குறையவில்லை. ''நாம் வீரர்கள்! வீரர்களாகவே வாழ்வோம்! வீழ்ந்தாலும் வீரர்களாகவே ***வீழ்வோம்!*** வீரர்களே முன்னேறுங்கள்!'' என்று ஜான்சி இராணி அவர்களை உற்சாகப்படுத்தினார். போர் தொடர்ந்தது; நாளாக ஆக ஆங்கிலேயரின் பீரங்கிகள் கோட்டைச் சுவரைத் துளைத்தன. இப்போது ஜான்சி வீரர்கள் கோட்டையிலிருந்து வெளியேறி ஆங்கிலேயரைத் தாக்கினர். ஜான்சி இராணி வாளெடுத்து எதிர்ப்பட்ட வீரர்களையெல்லாம் கொன்று குவித்தார்.

எனினும் ஜான்சி வீழ்ந்தது. இராணி இலட்சுமிபாய் குவாலியர் கோட்டைக்குச் சென்று அங்கிருந்து போரைத் தொடர்ந்தார். அவரது அயராத ஊக்கமும், வீரமும் ஆங்கிலேயர்களைத் திணற அடித்தன. முடிவில் குவாலியர் போரில் இராணி கொல்லப்பட்டார்.

இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்ட வீரமுடன் போராடியவர் ஜான்சி இராணி. தம் கணவன் இல்லாத நிலையிலும் தன்னம்பிக்கையுடன் வீரமுடன் போர் செய்த வீராங்கனை. எதற்கும் பயந்து கோழைகளாக வாழும் ஒவ்வொருவரும் அவரது துணிச்சலையும் வீரத்தையும்பற்றி எண்ணவேண்டும்

## பயிற்சி

(1) இலட்சுமிபாய் ஆட்சி செய்த இராச்சியம் எது?

(2) ஆங்கிலேயர்கள் ஏன் ஜான்சி இராச்சியத்தைத் தங்கள் இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டார்கள்?

(3) ஆங்கிலேயர்களுக்கு எதிராக கலகம் செய்தவர்கள் யார்?

(4) இராணி இலட்சுமிபாயை ஏன் வீராங்கனை என்கிறோம்?

# 17. சுவாமி விவேகானந்தர்

அமெரிக்காவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்று சிகாகோ. அங்கே சுமார் எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் ...... அந்நகரின் பெரிய மண்டபம் ஒன்றில் உலக சமய மகாநாடு நடந்து கொண்டிருந்தது. அங்கே இருந்தவர்கள் எல்லோரும் பல் நாடுகளிலிருந்து வந்தனர். ஒவ்வொருவரும் தங்களது சமயத்தைப் பற்றி மிக அழகாகப் பேசினார்கள். கடைசியில் அவர்கள் எல்லோரையும்விட வயதில் மிகவும் இளையவரான ஒரு துறவி பேசுவதற்கு எழுந்தார்.



படம் 17. சுவாமி விவேகானந்தர்

முன்னால் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து 'சகோதரர்களே! சகோதரிகளே!!' என்று அழைத்தார். எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சி; மற்றவர்கள் எல்லோரும் பேசும்போது 'சீமான்களே! சீமாட்டிகளே!!' என்று அழைத்தனர். ஆனால் இந்தத் துறவி மட்டும் 'சகோதரர்களே! சகோதரிகளே!!' என்று அன்பாக அழைத்தார்; அந்த வார்த்தையிலேயே எல்லா சமயத்தாரும் ஒன்றுதான் என்று அவர் கூறிவிட்டார். இது அவர்களுக்கு மிகவும் பிரியமாக இருந்தது. அவர் இந்து சமயத்தைப் பற்றி மிகவும் அழகாகப் பேசினார். எல்லோருடைய பேச்சைக் காட்டிலும் இந்தத் துறவியின் பேச்சுத்தான் மிகவும் நன்றாக இருந்தது எனப் பத்திரிகைகள் புகழ்ந்து எழுதின.

யார் இந்தத் துறவி? அவர்தான் நமது நாட்டிலிருந்து உலக சமய மகாநாட்டிற்குச் சென்ற விவேகானந்தர். மகா நாட்டில் மட்டுமல்ல; அமெரிக்காவில் பல்வேறு ஊர்களுக்கும் வந்து பேசும்படி அவரை அமெரிக்கர்கள் அழைத்தனர். அங்கிருந்து இங்கிலாந்து தேசம் சென்றார். ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும் சென்றார். நமது இந்து சமயம் பற்றி அவர்களுக்கு ஆங்கில மொழியில் பேசினார். இந்து சமயம் பற்றிப் பல நூல்கள் சமஸ்கிருத மொழியில் உள்ளன. விவேகானந்தர் சமஸ்கிருத நூல்களை நன்கு கற்றவர். அமெரிக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதனை ஆங்கில மொழியில் எடுத்துச் சொன்னார்.

விவேகானந்தருடைய தந்தை விசுவநாதர். தாயார் புவனேஸ்வரி தேவி. இருவரும் கல்கத்தாவில் வசித்து வந்தனர். அவர்கள் தங்கள் குழந்தைக்கு நரேந்திரன் என்று பெயரிட்டனர்.

நரேந்திரன் சிறு வயதிலிருந்தே 'இராமாயண, மகாபாரதக்' கதைகளைத் தமது தாயாரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டார். அவர் இராமர், கிருஷ்ணர், அநுமான், பீமன் போன்றவர்களைப்போல் தானும் பெரிய காரியங்கள் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டார்.

நரேந்திரர் கம்பீரமும் உடல் வலிமையும் உள்ள இளைஞராக வளர்ந்தார். அப்போது கடவுளைப் பற்றிய கேள்வி அவர் மனத்தில் எழுந்தது. தமக்குத் தெரிந்த பெரியவர்களிடமெல்லாம் 'கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா !' என்று கேட்டார். ஒருவரும் கடவுளைப் பார்த்ததாக அவரிடம் கூறவில்லை.

ஒரு நாள் கல்கத்தாவுக்கு அருகில் உள்ள தட்சிணேசுவரம் என்ற ஊருக்குச் சென்றார். அங்குள்ள காளிகோயிலில் இராமகிருஷ்ண பரமஹம்சர் என்ற துறவி வாழ்ந்து வந்தார். அவரைச் சந்தித்து நரேந்திரர் 'கடவுளைக் கண்டிருக்கிறீர்களா ?' என்று கேட்டார். 'உன்னைப் பார்ப்பது போல தெளிவாக கடவுளையும் நான் பார்க்கிறேன்; உனக்கும் காட்டுகிறேன்' என்று இராமகிருஷ்ணர் கூறினார். அன்று முதல் நரேந்திரன் இராமகிருஷ்ணரைக் குருவாக ஏற்றுக் கொண்டார்.

நரேந்திரரைப் பார்த்ததும் இராமகிருஷ்ணருக்கு அவர் மேல் மிகவும் பிரியம் உண்டாயிற்று. 'நீ சாதாரண மனிதன் இல்லை. உன்னால் உலகத்துக்குப் பெரிய நன்மை உண்டாகப் போகிறது. நான் சொல்வதை யெல்லாம் நீ உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும்' என்றார்.

சீக்கிரமே நரேந்திரர் இராமகிருஷ்ணரின் அனுமதியோடு துறவியானார்.

குரு இறந்த பின் நரேந்திரர் ஆசிரமம் அமைத்துச் சீடர்களோடு நாடு முழுவதும் சென்றார். ஊர் ஊராகச் சென்று தம் குருவிடம் தாம் கற்ற உயர்ந்த விஷயங்களையெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொன்னார். அப்போது விவேகானந்தர் என்ற பெயர் கொண்டார்.

விவேகானந்தர் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது அவரது பேச்சையும் அறிவையும் கண்ட தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அப்போது சிகாகோவில் உலக சமய மகாநாடு நடக்கவிருந்தது. தமிழர்கள் பணம் திரட்டி விவேகானந்தருக்குக் கொடுத்து அவரை அமெரிக்காவுக்கு அனுப்பினார்கள். இந்து சமயத்தின் சார்பாக உலக சமய மகாநாட்டில் இவர் கலந்து கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய விவேகானந்தரை இந்தியர்கள் நன்கு வரவேற்றார்கள். பின்பு இவர் பல இடங்களிலும் தம் குருவின்

பெயரால் இராமகிருஷ்ண மடங்களை ஆரம்பித்தார். இந்த மடத்தில் உள்ள துறவிகள் நாடெங்கும் பள்ளிக்கூடங்களும் அனாதை ஆசிரமங்களும் நடத்தி வருகிறார்கள்.

பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக் கடவுளைப்பற்றிய உயர்ந்த விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். வெள்ளத்தாலும், வியாதியாலும் மக்கள் கஷ்டப்படும் போது இந்தத் துறவிகள் சென்று உதவி செய்கிறார்கள்.

தமது 39ஆவது வயதில் (1902 ஆம் ஆண்டு) விவேகானந்தர் கடவுளை மனத்தில் தியானித்துக் கொண்டே இறந்தார். உலகெங்கும் சென்று நம் இந்தியாவின் பெருமையை உயர்த்திய மகான் விவேகானந்தர்.

இந்தப் பெரியாரின் ஞாபகார்த்தமாக ஒரு பெரிய மண்டபமும், அதனுள் அவருடைய சிலையும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த **சுவாமி விவேகானந்தர் மண்டபம்** நமது நாட்டின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரியில் உள்ள கடலினுள் ஒரு பாறை மீது கட்டப்பட்டுள்ளது. இது ஓர் அழகிய மண்டபம். இந்தக் கலைச் சின்னத்தைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வருகின்றனர், அயல் நாட்டினரும் மூன்று கடல்கள் கூடும் இடத்தில் கட்டப்பட்டிருக்கும் இந்த மண்டபத்தைப் பார்க்க வருகிறார்கள்.

### பயிற்சி

(1) விவேகானந்தர் எல்லோரிடமும் என்ன கேள்வி கேட்டிருந்தார்?
(2) அவரைச் சிகாகோ மகாநாட்டிற்கு அனுப்பியவர்கள் யார்?
(3) நரேந்திரரின் குரு யார்?
(4) சிகாகோ மகாநாட்டில் விவேகானந்தர் எவ்வாறு தம் பேச்சை ஆரம்பித்தார்?
(5) இராமகிருஷ்ண மடங்கள் செய்யும் சேவைகள் யாவை?

# 18. பாலகங்காதர திலகர்

அப்போது ஆங்கிலேயர்கள் நம்மை ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். பம்பாய் உயர்நீதி மன்றத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆங்கிலேய நீதிபதி திலகர், பெருமானை விசாரித்துக்கொண்டிருந்தார். ''அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கலகம் செய்வதற்கு நீர்தான் காரணம்; அரசாங்கத்தைப்பற்றி தவறாக நீங்கள் எழுதுகிறீர்கள்'' என்றார் நீதிபதி. ''நீங்கள் மக்களைக் கொடுமைப்படுத்துகிறீர்கள்; அடக்கி ஆள்கிறீர்கள்; அதனால் தான் மக்கள் உங்களுக்கெதிராகக் கலகம் செய்கிறார்கள்'' என்றார் திலகர் பெருமான். இப்படி இருபத்தோரு மணி நேரம் தொடர்ச்சியாக, திலகர், தான் செய்வதுதான் சரியென்று வாதிட்டார். எட்டு நாள்கள் வழக்கு நடந்தது. முடிவில் 'திலகர் குற்றவாளி' என்று நீதிபதி தீர்ப்பளித்தார். ஆறு ஆண்டுகள் நாடுவிட்டு வேறு நாட்டிற்குச் சென்று சிறையிலிருக்க வேண்டுமென்று தண்டனையளித்தார்கள். குழந்தைகளே! உங்களால் உங்கள் வீட்டிலிருந்து ஒரு நாளாவது எங்காவது தனியாகப் போய் இருக்க முடியுமா? மிகவும் கஷ்டம்; ஆயினும் திலகர் பெருமான் வீட்டில் அருமையான மனைவி மக்களை விட்டு, உற்றார் உறவினரை விட்டு, தனக்கும் பிரியமான இந்த நாட்டை விட்டு ஆறு ஆண்டுகள் கண்காணாத சிறையில் இருந்தார். பர்மா தேசத்தில் மாண்டலே நகரில் சிறிய அறையில் சமைத்து, தனியாக உண்டு ஆறு ஆண்டுகள் சிறையிலிருந்தார். அப்போது மிகவும் உடல் நலிந்தார். நம் நாடு விடுதலை பெற வேண்டுமென்று இவ்வாறு கஷ்டப்பட்டார். ஆறு ஆண்டுகள் கழித்துத் திரும்பி வந்தார். அதன் பிறகும் முன் மாதிரியே நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். நம் நாட்டில் மட்டுமல்ல, ஆங்கிலேயர்களின் தேசத்திலேயே ஓர் ஆண்டு தங்கி இந்தியா விடுதலையடைய வேண்டுமென்று கூறினார். யாருக்கும் எதற்கும் பயப்படாத வீரர் திலகர்.



படம் 18. பாலகங்காதர திலகர்

திலகர் பெருமானுக்குப் பெற்றோர்கள் பால கங்காதர திலகர் என்று பெயரிட்டனர். மகாராஷ்டிர மாநிலத்தில் கிசல் என்ற கிராமத்தில் திலகர் பிறந்தார். அவருடைய தந்தை கங்காதரர் ஓர் ஆசிரியர். அவரது தந்தையைப் போல் திலகர் சமஸ்கிருதத்திலும், கணிதத்திலும் கெட்டிக்காரராக இருந்தார். பத்தாவது வயதில் தம் தாயையும், பதினைந்தாவது வயதில் தம் தந்தையையும் இழந்தார்.

பூனா பள்ளியில் படித்து விட்டுப் பின்பு கல்லூரியிலும் கற்றார். பி.ஏ. படித்து விட்டு வக்கீல் வேலைக்கும் படித்து முடித்தார்.

வேலைக்குப் படித்து முடித்த பின் எல்லோரும் வேலைக்குப் போய் பணம் சம்பாதிப்பார்கள். நம் திலகர் என்ன செய்தார் தெரியுமா? நமது மாணவர்களுக்கு நாட்டைப் பற்றியும், நாட்டின் மேல் பற்றுக்கொள்ளவும் சொல்லிக் கொடுக்க ஆசைப்பட்டார். அப்போது ஆங்கிலேயர் நடத்திய பள்ளிகளில் நமது நாட்டுப்பற்று பற்றி சொல்லிக் கொடுக்க முடியாதல்லவா? எனவே தம்முடைய நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு ''நியூ இங்கிலீஷ் ஸ்கூல்'' என்ற பள்ளியை ஆரம்பித்தார். அந்தப் பள்ளியில் தானும் குறைந்த சம்பளத்தில் ஆசிரியராக வேலை பார்த்தார். 19 மாணவர்களுடன் ஆரம்பித்த இந்தப் பள்ளியில் நான்கு ஆண்டுகளுக்குள் 1009 பேர் படித்தனர். சீக்கிரமே பள்ளி பர்கியூஷன் கல்லூரியாக வளர்ந்தது. அந்தக் கல்லூரியில் முதன் முதலில் பணிபுரிந்த ஆசிரியர்களுள் திலகரும் ஒருவர். அவர் கணிதப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கும் நமது தாய் நாடான இந்தியாவின் மேல் பற்று வர வேண்டுமென்று திலகர் விரும்பினார். எனவே மக்கள் படிப்பதற்கு மராத்தியில் 'கேசரி' என்ற பத்திரிகையையும் 'மராட்டா' என்ற ஆங்கில பத்திரிகையையும் ஆரம்பித்தார். நம்மை ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் செய்த தவறுகளையெல்லாம் தமது பத்திரிகையில் எடுத்துக் காட்டினார். ஆங்கிலேய அரசாங்கம் பற்றி மக்களுக்கு உண்மை தெரிய வந்தது.

மகாராஷ்டிர மாநிலத்தில் விநாயக சதுர்த்தியை அவரவர் வீடுகளில் கொண்டாடுவார்கள் திலகர் அதைப் பலரும் ஒற்றுமையுடன் கூடி அவரவர் ஊர்களில் தெருக்களில் கொண்டாட ஏற்பாடு செய்தார். மராத்திய வீரர் சிவாஜிக்கு நினைவு நாள் கொண்டாட ஏற்பாடு செய்தார். சிவாஜி சிறந்த வீரர். பேரரசர் ஒளரங்கசீப்பையே எதிர்த்து வெற்றி கண்டவர். அவருக்கு விழாக் கொண்டாடினதால் மக்கள் வீர உணர்ச்சி பெற்றனர். இவ்வாறு ஒற்றுமையையும் வீரத்தையும் வளர்த்தார்.

காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து ஓயாமல் அரசாங்கத்தை எதிர்த்தார். அவர் பத்திரிகையைப் படித்தவர்கள், அவர் பேச்சைக் கேட்டவர்கள், நமது தாய் நாடு ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்று அறிந்து கொண்டார்கள். அப்போது பம்பாயில் பிளேக் நோய் பரவி அதிக அளவில் மக்கள் இறந்தனர்; பின்பு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் அரசாங்கம் வேண்டிய அளவு மக்களுக்கு உதவி செய்யவில்லை. அதையெல்லாம் தமது 'கேசரி' பத்திரிகையில் எழுதினார். தாமே பல இடங்களுக்குச் சென்று

புதிய ஆஸ்பத்திரிகள் திறந்தார்; மக்களுக்கு உணவும், பணமும் கொடுக்க அரசாங்க அதிகாரிகளுக்கு உதவினார். ஆதலால் மக்கள், திலகர் மேல் மிகுந்த அன்பு செலுத்தினர். அவரை **லோகமான்யர்** (மக்களால் மதிக்கப்படுபவர்) என்று ஆசையாக அழைத்தனர்.

ஆங்கிலேய அரசாங்கத்தைப் பற்றி அறிந்து கொண்ட மக்கள் அவர்களை எதிர்த்தனர்; எதிராகக் கலகம் செய்தனர். இப்படித்தான் விடுதலை பெற முடியும் என்று திலகர் காங்கிரஸ் கட்சியில் கூறினார். எனவே ஆங்கிலேய அதிகாரிகள் அவரை அடிக்கடி ஏதாவது ஒரு காரணங்கூறிக் கைது செய்தனர்.

''சுயராஜ்யம் நமது பிறப்புரிமை; அதை நாம் அடைந்தே தீருவோம். விடுதலைதான் சொர்க்கம். அடிமை வாழ்வு நஞ்சு'' என்றார். கட்டாயம் நாம் விடுதலை பெற வேண்டும் என்று மக்களைத் தயார்படுத்திய பெரிய தலைவர் திலகர். அவர் காலத்தில் நாம் விடுதலையடையவில்லை எனினும் அதற்காகவே அவர் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்.

## பயிற்சி

(1) திலகர் ஆரம்பித்த பள்ளி எது? கல்லூரி எது?
(2) திலகர் ஆரம்பித்த பத்திரிகைகள் எவை?
(3) பத்திரிகையில் அவர் எழுதியது என்ன?
(4) திலகர் ஏன் நாடு கடத்தப்பட்டார்?
(5) திலகர் கொண்டாடிய விழாக்கள் எவை?

# 19. வ. உ. சிதம்பரனார்

அது வெள்ளைக்கார கலெக்டர் விஞ்ச் துரை அவர்களின் அலுவலகம்; யாரிடமோ மிகக் கோபமாக கலெக்டர் பேசிக் கொண்டிருக்கிறார்; ''நாங்கள் உங்களை ஆட்சி செய்கிறோம். எனவே கப்பல் கம்பெனி வைத்திருக்கிறோம். அதற்கு எதிராக நீங்கள் சொந்தமாகக் கப்பல் வாங்குவதா? அந்தக் கப்பலில் சரக்குகளை ஏற்றுகிறீர்கள், பிரயாணிகளை ஏற்றிச் செல்கிறீர்கள், இது எவ்வளவு தவறு என்று தெரியுமா? ஊர் ஊராகச் சென்று மேடை போட்டுப் பேசுகிறீர்கள். வெள்ளையர்களை இந்த நாட்டை விட்டு அனுப்பிவிட்டு, நமது நாட்டை நாமே ஆள்வோம் என்று மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறீர்கள். இந்த சாதுவான மக்களை வந்தே மாதரம்! வந்தே மாதரம்!! என்று கோஷம் போடச் சொல்கிறீர்கள். இதற்கெல்லாம் தண்டனை என்ன என்று தெரியுமா?''



படம் 19. வ. உ. சிதம்பரனார்

''தெரியும்'' தைரியமாகப் பதில் சொல்கிறார் எதிரில் நின்ற வ. உ. சிதம்பரனார். ''இது எங்கள் நாடு. இந்தியர்களாகிய நாங்கள் அடுத்த நாட்டோடு வாணிபம் செய்யவும் கடல் வழி வேறு ஊர்களுக்குச் செல்லவும் நாங்கள் கப்பல் விடுவதுதான் சரி; வெள்ளையர்களாகிய நீங்கள் அந்நியர்கள். நீங்கள் இங்கு வந்து கப்பல் விடுவதுதான் தவறு. அதைத்தான் ஊர் ஊராகச் சென்று மேடையில் சொல்கிறேன். உங்களை இந்த நாட்டிலிருந்து விரட்டுவது பற்றிப் பேசுகிறேன். இது எங்கள் நாடு; நாங்கள் கூடிப் பேசுகிறோம். உங்களுக்கென்ன? வந்தே மாதரம் என்றால் தாய் நாடு வாழ்க என்று பொருள். தாய் நாடு வாழ்க! என்று கோஷமிடுவது தவறில்லை. இதற்கு எந்தத் தண்டனை கொடுத்தாலும் பயமில்லை. நான் என் தேசத்திற்காக இந்த வேலைகளைச் செய்து கொண்டுதான் இருப்பேன், நிறுத்த மாட்டேன்'', என்று வீரமாகப் பதில் கூறி, ''வந்தே மாதரம்'' என்று கோஷமிடுகிறார் சிதம்பரனார்.

எவ்வளவு துணிச்சல்! ஆம். சிதம்பரனார் நமது தேசத்தை தம் உயிரைவிட அதிகமாக நேசித்தார். திருநெல்வேலி மாவட்டத்தில்

ஓட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்து நன்கு கற்று வக்கீல் தொழிலுக்கு வந்தவர் அவர். தூத்துக்குடியில் வக்கீல் தொழில் செய்து வந்தார். நமது நாட்டை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்ததை வெறுத்தார்.

'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' என்ற வெள்ளைக்காரக் கம்பெனி தூத்துக்குடியில் கப்பல்கள் வைத்து வாணிபம் நடத்தி வந்தது. அதற்கு எதிராக சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார். தம்மைப்போல் நாட்டுப் பற்று உடைய பலரைச் சேர்த்து அதிகப் பணம் சேர்த்தார். முதலில் கப்பல்களை வாடகைக்குப் பிடித்தார். பின்பு பம்பாய்க்கு தாமே நேரில் சென்று 'காலியா' என்ற புதிய கப்பல் வாங்கினார். பிரான்ஸ் தேசத்திற்குச் சென்று 'லாவோ' என்ற மற்றொரு கப்பல் வாங்கினார் ஒரு நண்பர். இரண்டு கப்பல்களிலும் தூத்துக்குடி வாணிகர்கள் தங்கள் சரக்குகளை ஏற்றினர். கம்பெனிக்கு நல்ல வருமானம் கிடைத்தது. அதனால் வெள்ளைக்காரக் கம்பெனியின் வருமானம் குறைந்தது. அதனால் தான் வெள்ளைக்காரர்கள் அவர் மீது கோபங் கொண்டார்கள்.

அது மட்டுமல்ல, அவர் தமிழில் மிகவும் பாண்டித்யம் பெற்றவர். எனவே மக்களுக்கு அந்நிய ஆட்சியின் கொடுமையை நன்கு எடுத்துச் சொன்னார். அவர்கள் முன்பு வெளிநாட்டிலிருந்து வந்த துணிகளைக் கொளுத்தினார். ''நமக்கு வேண்டிய பொருட்களை நாமே செய்ய வேண்டும். நமது நாட்டுப் பொருட்களைத்தான் நாம் பணம் கொடுத்து வாங்க வேண்டும். அப்போது தான் நமது பணம் வெளியே போகாது'' என்று கூறினார். இதுதான் 'சுதேசி இயக்கம்' இது மக்களுக்குப் பிடித்தது. இவரும், இவருடைய நண்பர் சுப்ரமணிய சிவா என்ற இளந்துறவியும் மேடையில் நன்கு பேசினார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளைக் கார அரசாங்கத்திற்கு எதிர்ப்பு பெருகியது.

அப்போதுதான் கலெக்டர் விஞ்ச் நம் சிதம்பரனாரை விசாரித்தார். அவரது துணிச்சலான பதிலினால் கோபமுற்ற கலெக்டர் அவரைக் கைது செய்தார். அதனால் மக்கள் ஆத்திரமுற்றார்கள். கோபங்கொண்டு போலீஸ் ஸ்டேஷனைக் கொளுத்தினர்; கலகம் செய்தனர். கலகம் தீவிரமானது. போலீஸார் சுட்டனர். இந்தக் கலகங்களுக்கெல்லாம் சிதம்பரனாரும் சுப்ரமண்ய சிவாவுமே காரணமென்று அரசாங்கம் கூறியது. சிதம்பரனாருக்கு நாற்பது ஆண்டுகளும் சுப்ரமண்ய சிவாவுக்கு பத்து ஆண்டுகளும் நாடு கடத்தித் தண்டனை விதித்தது. இதனை நாடெங்கிலும் மக்கள் எதிர்த்தனர். பின்பு நான்கு ஆண்டுகள் கடுங்காவலாக அது மாற்றப்பட்டது.

சிதம்பரனார் முதலில் கோயம்புத்தூர் சிறையில் இருந்தார். பின்பு கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார். சிறையில் அவருக்கு கடினமான வேலைகள் தரப்பட்டன. எண்ணெய் ஆட்டும் செக்கை, மாடுகள் தான் சுற்றிச் சுற்றி இழுக்கும். மாடுகளுக்குப் பதில் சிதம்பரனாரையே செக்கை இழுக்க வைத்தனர். எனவே செக்கிழுத்த செம்மல் என அழைக்கப்பட்டார்.

சிதம்பரனாருக்குக் கொடுத்த தண்டனையைப் பார்த்து தூத்துக்குடியில் அவர் ஆரம்பித்த சுதேசிக் கப்பல் கம்பெனிக்காரர்கள் பயந்து விட்டனர். கப்பல் கம்பெனியைக் கலைத்து விட்டனர். வெள்ளையர்களிடமே அந்தக் கப்பல்களை விற்று விட்டனர். இதைக் கேள்விப்பட்ட சிதம்பரனார் மிகவும் கவலைப்பட்டார்.

சிறையிலிருந்து வெளி வந்த பின் தமது வக்கீல் தொழிலை நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். பணவசதியின்றி வறுமையில் வாடினார். பின்பு அரசாங்கத்தின் அனுமதி பெற்று தம் தொழிலை நடத்தினார்.

தமிழில் மிகவும் கெட்டிக்காரரான சிதம்பரனார் பல சிறந்த நூல்கள் எழுதியுள்ளார். நல்ல ஆங்கில நூல்களை தமிழில் மொழி பெயர்த்தார். தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

ஆயினும் தம் தாய் நாட்டு சேவையை அவர் மறக்கவில்லை. தாம் சாகும் தருவாயில்கூடத் தேசப் பக்திப் பாடல்களை மற்றவர்களைப் பாடச், சொல்லிக் கேட்டுக் கொண்டே இறந்தார். நாடு விடுதலையடைவதைப் பார்க்காமல் இறந்து போவது பற்றி மிகவும் வருந்தினார்.


அவர் இறந்த பின், அவர் விரும்பியபடியே நாடு விடுதலை பெற்றது. தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே விடப்பட்ட கப்பலுக்கு வணிகர்கள் 'வ. உ. சிதம்பரம்' என்று பெயரிட்டனர். இவ்வாறு கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாருக்கு மக்கள் தங்கள் நன்றியைக் காட்டிக் கொண்டனர். மேலும் தூத்துக்குடியில் அவர் பெயரில் ஒரு பெரிய கல்லூரி தூத்துக்குடி மக்களால் நடத்தப்பட்டு வருகிறது.

## பயிற்சி

(1) .சிதம்பரனார் ஏன் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்தா்ர் ?
(2) அவர் வாங்கிய கப்பல்களின் பெயரென்ன ?
(3) ஆங்கில அரசாங்கம் அவருக்குக் கொடுத்த தண்டனை என்ன ?
(4) சிதம்பரனாா ஏன 'செககிழுத்த செம்மல்' என்று அழைக்கப்பட்டார் ?

# 20. மகாத்மா காந்தி

காந்திஜி ஒரு முறை ஒரு சிறிய பள்ளிக்குச் சென்றார். அங்கேயிருந்த ஒரு சிறுவன் எழுந்து, ''பாபுஜி, நீங்கள் ஏன் சட்டை போடுவதில்லை? உங்களிடம் சட்டையில்லையா? நான் என் அம்மாவிடம் கேட்டுச் சில சட்டைகள் கொண்டு வருகிறேன்'' என்றான். அதற்கு காந்திஜி ''எனக்கு நாற்பது கோடி சட்டைகள் வேண்டுமே உன்னால் அதைக் கொண்டு வர முடியுமா?'' என்றார். இந்தியாவில் அவர் காலத்தில் வாழ்ந்த நாற்பது கோடி மக்களுக்கும் சட்டை அணிய முடிந்தால்தான், தாம் சட்டை போட முடியுமென்று கூறுகிறார் காந்திஜி. இப்படி இந்திய மக்கள் அனைவரையும் தம் மக்களாகப் பாவித்தவர் காந்திஜி.



படம் 20. மகாத்மா காந்தி

நம் நாட்டைக் காக்க வந்த சாந்தி மகான் 1869—ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாள் போர்பந்தர் நகரில் பிறந்தார். சிரவணன் கதையும், அரிச்சந்திரன் கதையும் அவருக்குப் பிடித்தவை. வயதான தாய் தந்தையரை ஊர்ஊராகத் தோளில் சுமந்து சென்று, கடவுளை வழிபட்டவன் சிரவணன். அரிச்சந்திரன் தான் சொன்ன சொல்லைக் காக்க நாட்டையும், மனைவியையும், மகனையும் இழந்தவன். உண்மைக்காக துயருற்றான். இவை அவர் மனத்தில் ஆழமாகப் பதிந்தன. அதன்படி தாய் தந்தையரை அதிகமாக நேசித்தார்; உண்மையைக் கடவுளாக வழிபட்டார்.

பள்ளிப் படிப்பு முடிந்து சட்டப் படிப்புப் படிக்க லண்டன் சென்றார். அப்போது தம் தாய்க்கு லண்டனில் 'மது அருந்த மாட்டேன், மாமிசம் சாப்பிடமாட்டேன், ஒழுக்கமாக வாழ்வேன்' என்று மூன்று சத்தியங்கள் செய்து கொடுத்தார். கடைசி வரை அந்த சத்தியத்தைக் காப்பாற்றினார்.

சட்டம் படித்து பாரிஸ்டராக இந்தியா திரும்பினார். தென்னாப்ரிக்காவில் வழக்கு ஒன்றினை வாதாட அவருக்கு அழைப்பு வந்தது. அங்குச் சென்றார். வெள்ளையர்கள் கறுப்பர்கள் என்ற பாகுபாடு அங்கு இருந்தது. அங்கே ஏராளமான இந்தியர்கள் வசித்தனர். இந்தியர்கள் வாழும் பகுதிகள் ஊரைவிட்டு ஒதுங்கி இருந்தன. வெள்ளையர்களோடு வாழவும், பிரயாணம் செய்யவும் அவர்களுக்கு உரிமையில்லை. அவர்களுக்கு அங்குத் தோட்டங்களில் வேலைபார்க்கச் சென்ற இந்தியக் கூலிகள் முன்னேற

வழியில்லை. இதனைக் கண்ட காந்திஜி அமைதியான முறைகளில் தென்னாப்ரிக்கர்களுடைய சட்டங்களை மீறி நடந்தார். தவறான சட்டங்களை மறுக்கும் சத்யாக்கிரகம் இப்படித்தான் ஆரம்பமானது. திரும்பவும் இந்தியா வந்து, தம் மனைவி கஸ்தூரி பாயையும் மக்களையும் அங்கு அழைத்துச் சென்றார். நெடுங்காலம் போராடினார். வெள்ளையர்கள் ஓரளவு இந்தியர்களை நன்கு நடத்த ஒப்புக் கொண்டனர்.

அதன் பின்பு காந்திஜி இந்தியா திரும்பினார். இந்தியா விடுதலை பெற பாலகங்காதர திலகர், கோகலே போன்ற தலைவர்கள் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். காந்திஜி வந்த பின், அவரே விடுதலைப் போராட்டத்திற்கு தலைவரானார். அஹிம்சை வழியில் ஆங்கிலேயரை எதிர்க்க ஆரம்பித்தார். ஆங்கிலேய அரசாங்கத்தோடு ஒத்து உழைக்க மறுத்தார். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தார். ஆங்கிலேய சட்டங்களை மீறினதால் ஆயிரக் கணக்கானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். காந்திஜியும் தலைவர்களும் சிறையில் வைக்கப்பட்டனர்.

அதுமட்டுமன்று, வெளி நாட்டுத் துணிகளைப் பயன்படுத்தக் கூடாது; நாமே நூல் நூற்று நெய்த ஆடையை — கதராடையைத்தான் — உடுத்த வேண்டும், எனக் கேட்டுக் கொண்டார். ஏராளமாக அந்நியத் துணிகள் கொளுத்தப்பட்டன. கதர் இயக்கம் ஆரம்பமாயிற்று. இதனால் நம் நாட்டுப் பணம், பொருள் இவை நம்மிடையே தங்கியது.

அவர் காட்டிய ஒத்துழையாமை வழியில் மக்கள் சென்றனர். பலர் ஆங்கில அரசாங்கம் தந்த பட்டங்களையும் பதவிகளையும் துறந்தனர். ஏழை மக்கள் பயன்படுத்தும் உப்பை தயார் செய்ய அரசாங்கம் வரி விதித்தது. இந்த உப்பு சட்டத்தை மீறி காந்திஜி தொண்டர்களோடு 'தண்டி' என்ற இடம் சென்று உப்பு எடுத்தார். அதன்படி உப்பு சத்தியாக்கிரகம் பல இடங்களிலும் நடைபெற்றது.

பலமுறை சிறை சென்றும், பேச்சுகள் நடத்தியும் பயனில்லை. பிறகு 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம் ஆரம்பித்தார். முடிவில் ஆங்கிலேய அரசாங்கம் நமக்கு விடுதலை கொடுக்க ஒப்புக் கொண்டது. நாம் 1947-ல் விடுதலையடைந்தோம்.

நம் மக்களில் ஒரு பகுதியினரைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கியிருப்பது கண்டு காந்திஜி வருந்தினார். அதனைத் தீண்டாமை நோய் என்றார். இந்தத் தீண்டாமை ஒழிப்பிற்காக நாடெங்கும் சென்றார் தாமே அவர்களோடு ஒன்றாக ஆச்ரமத்தில் வாழ்ந்து வழிகாட்டினார். மக்கள் தவறு செய்த போதெல்லாம், உண்ணாவிரதமிருந்து தன்னை வருத்திக் கொண்டார்.

நாடு விடுதலையடைந்தது. ஆனால் பாரதம், பாகிஸ்தான் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது. பாரதத்தில் வசித்த முஸ்லீம்களில் சிலரும் பாகிஸ்தானில் வசித்த இந்துக்கள் சிலரும் ஒருவருக்கொருவர் வெறுப்புற்றனர். கொலையும் கலகங்களும் நடந்தன. திரும்பவும் உண்ணாவிரதமிருந்தார். கலகம் நடந்த இடத்திற்கெல்லாம் கால் நடையாகச் சென்று, அன்புடன் அஹிம்சை வழியில் நடக்கச் சொன்னார். என்ன செய்தும் என்ன பயன்? அவரது அன்பு வழியைப் புரிந்து கொள்ளாத கோட்சே என்பவன், டில்லியில், அவர் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த பொழுது அவரைச் சுட்டுக் கொன்று விட்டான்.

இந்தப் புனித நாட்டிற்கு விடுதலை தேடித்தர வந்த தலைவர் அவர். அவர் தமக்காக வாழவில்லை. மக்களுக்காக வாழ்ந்தார். உண்மையும் அஹிம்சையும் அவர் வழியாகியது. அதனால்தான் அவரை மகாத்மா என்று வணங்குகிறோம். 'நாட்டின் தந்தை' என்று போற்றுகிறோம்.

### பயிற்சி

(1) காந்திஜியைக் கவர்ந்த கதைகள் யாவை ?

(2) இங்கிலாந்திற்குச் செல்லும் போது அவர் தாய்க்குக் கொடுத்த உறுதி மொழிகள் யாவை ?

(3) காந்திஜியை ஏன் 'மகாத்மா' என்கிறோம் ?

# 21. பண்டித ஜவஹர்லால் நேரு

அலஹபார்த்தில் அரண்மனையையும் விடப் பெரிய, அழகான வீடு; அதில் அரசரைப்போல் வாழும் சீமான். அவர் அன்று மெத்தைக் கட்டிலின் வசதியைவிட்டுக் கீழே வெறுந்தரையில் படுத்துப் பார்க்கிறார்; கண்கள் கலங்குகின்றன. ஏன்? அந்த அரண்மனையில் வளர்ந்த அவரது ஒரே செல்வ மகன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடப் போகிறான். நாட்டு விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்க்கப்போகிறான். உடனே அவர்கள் அவனைச் சிறையில் தள்ளி விடுவார்கள். சிறையில் மகன் கட்டாந்தரையில் படுப்பான். அந்த அனுபவம் எப்படி இருக்கும் என்று தந்தை தானே தரையில் படுத்துப் பார்க்கிறார்.



படம் 21.
பண்டித ஜவஹர்லால் நேரு

நாட்டு விடுதலைக்காக தாயார், தந்தை, சகோதரிகள், மனைவி, மகள் என்று எல்லோரும் பாடுபட்ட தியாகக் குடும்பம் ஜவஹர்லால் நேருவின் குடும்பம். அவரது பதின் மூன்றாம் வயதிலேயே அவரை இங்கிலாந்திற்கு அனுப்பி அங்கேயே தங்கிப் படிக்கவைத்தார் தந்தை மோதிலால் நேரு.

இங்கிலாந்து நாட்டில் கேம்ப்ரிட்ஜில் பி.ஏ. ஆனர்ஸ் படித்து முடித்துச் சட்டமும் படித்துத் திரும்பினார். இங்கிலாந்தில் இருக்கும்போதே ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியாவில் மக்கள் என்னென்ன முயற்சிகள் செய்து வருகிறார்கள் என்று தெரிந்து வைத்திருந்தார். அப்போது நமக்கு வேண்டிய உரிமைகளைச் சிறிது சிறிதாகப் பொறுத்திருந்து வாங்க வேண்டுமென்று பல தலைவர்கள் நினைத்தனர். ஆனால் ஜவஹருக்கு அது பிடிக்கவில்லை. விடுதலைக்காகத் தீவிரமாகப் பாடுபட நினைத்தார். அவரது தந்தையின் அனுமதி முதலில் கிடைக்கவில்லை.

ஆனால் பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக்கில் ஒரு பாவமும் அறியாத மக்களை, ஜெனரல் டயர் என்னும் ஆங்கிலேய அதிகாரி சுட்டுக் கொன்றான். அதனால் நாட்டில் காந்திஜி தலைமையில் மக்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்தனர். மோதிலால் நேருவும், ஜவஹரும் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட ஆரம்பித்தனர்; பலமுறை சிறைப்பட்டனர். 1929-ல் லாகூரில் ஜவஹர்லால் நேரு அகில இந்திய காங்கிரசுக்குத் தலைமை வகித்தார். பூர்ண சுதந்திரம் பெறுவதே நமது இலட்சியம் என்று கூறினார். அதுமுதல் போராட்டம்

தொடர்ந்தது. அவர் குடும்பத்தார் அனைவரும் ஒவ்வொருவராகக் கைது செய்யப்பட்டனர். அடுத்த சில ஆண்டுகளில் அவரது தந்தை இறந்து விட்டார். மனைவி கமலா நேருவும் உடல் நோயுற்றார். அதன் காரணமாக ஜவஹர் விடுதலை செய்யப்பட்டார். தம் மனைவியின் உடல் நலத்திற்காகச் சுவிட்சர்லாந்து சென்றார். எனினும் கமலா நேரு உடல் நலங்குன்றி இறந்தார்.

தம்மை விட்டுத் தாயும், தந்தையும், மனைவியும் இறந்த போதும் நேருஜி மனங் கலங்கவில்லை. தொடர்ந்து காந்திஜி ஆரம்பித்த போராட்டங் களில் எல்லாம் கலந்து கொண்டார். அதனால் ஆங்கிலேய ஆட்சியில் சிறையில் சுமார் ஒன்பது ஆண்டுகள் வாடினார்.

சிறையிலிருந்து நேருஜி தமது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள் மிகச் சிறப்பானவை. நமது நாட்டைப் பற்றி 'இந்தியா விழித்தெழுகிறது' என்ற புத்தகத்தை ஜவஹர் அங்குதான் எழுதினார்.

ஜவஹரைப் போன்ற பெரிய தலைவர்களின் இடைவிடாத உழைப் பால்தான் நமக்குச் சுதந்திரம் 1947-ல் கிடைத்தது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக ஜவஹர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் 1964-ல் அவர் இறக்கும் வரை நமது பிரதம மந்திரியாகப் பணியாற்றி யுள்ளார்.

அந்தக் காலத்தில் நமது நாட்டில் பல பெரிய அணைக்கட்டுகள் கட்டி நீர்ப்பாசன வசதி செய்தார். அதனால் விவசாயம் வளர்ந்தது. பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார்; அதனால் நம் நாடு தொழில்வளத்தில் முன்னேறியுள்ளது.

நம்மை விட்டுச் சென்ற ஆங்கிலேயருடன் நட்பு நாடாகவே நாம் வாழ்கிறோம். உலகில் எந்த நாட்டுடனும் நாமாகப் போருக்குப் போகக் கூடாது என்ற நல்ல வழியில் நம் நாடு செல்கிறது. இதற்கெல்லாம் நேருஜி காட்டிய வழிதான் காரணம்.

தினமும் பதினெட்டு மணி நேரம் நேருஜி அயராது வேலை பார்த்தார். அவரது தலைமையில் நாடு முன்னேறியது. அவர் 1964ஆம் ஆண்டு மே 27ஆம் தேதி நம்மை விட்டுப் பிரிந்தாலும் இந்த நாட்டு வயல் வெளியில், காற்றுவெளியில் நம்மோடுதான் இருக்கிறார்.

## பயிற்சி

(1) நேருஜியின் குடும்பத்தை ஏன் தியாகக் குடும்பம் என்கிறோம்?
(2) லாகூர் காங்கிரஸில் நேருஜி கூறியதென்ன?
(3) நம் நாட்டில் எவ்வாறு விவசாயம் வளர்ந்தது?
(4) நேருஜி நமக்குக் காண்பித்த நல்ல வழி யாது?

# 22. மௌலானா அபுல்கலாம் ஆஸாத்

முஸ்லீம்கள் நூற்றுக் கணக்கில் உட்கார்ந்து ஏதோ ஒரு பத்திரிகையைப் படித்து விளக்குவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே; இவர்கள் மட்டுமா, வட இந்தியாவில் கி. பி. 1912ஆம் ஆண்டில் எங்குப் பார்த்தாலும் முஸ்லீம்கள் கையில் அந்தப் பத்திரிகைதான். உருது மொழியில் உள்ள அந்தப் பத்திரிகையில் அப்படி என்னதான் எழுதியிருந்தது? முதியோர், இளைஞர் என்று எல்லோரும் அதில் எழுதியுள்ளதைப் பற்றி யோசிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்கிறார்கள். அந்தப் பத்திரிகையில் சொல்லியிருப்பது சரிதான் என்று நினைக்கிறார்கள்.



படம் 22. மௌலானா அபுல்கலாம் ஆஸாத்

அது என்ன பத்திரிகை? அதன் ஆசிரியர் யார்? அதுதான் அல்-ஹிலால் என்ற உருது மொழிப் பத்திரிகை. இதை நடத்திய ஆசிரியர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் என்ற பேரறிஞர். அப்போது இந்திய விடுதலைக்காக நாடெங்கும் மக்கள் சேர்ந்து பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள்; ஆனால் அதில், முஸ்லீம்கள் சேராது, தனியாக ஒதுங்கி இருந்தார்கள், அது தவறு. சுதந்திரம் பெற, மற்ற மக்களோடு சேர்ந்து முஸ்லீம்களும் பாடுபட வேண்டுமென்று, அழகாக 'அல்-ஹிலால்' பத்திரிகையில் சொன்னார். அவர் உறுதியாகக் கூறியது, எல்லோருக்கும் சரி என்று பட்டது. முஸ்லீம்கள் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்கள்.

முஸ்லீம்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தது ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரை அவர் சொந்த ஊரான கல்கத்தாவை விட்டு விரட்டியது. முஸ்லீம்கள் அதிகமாக வாழும் வங்காளம், பஞ்சாப், டில்லி, ஐக்கிய மாகாணம் (இப்போதைய உத்தரப் பிரதேசம்) போன்ற இடங்களில் அவர் இருக்கக்கூடாது என விரட்டியது. அபுல்கலாம் ஆஸாத் பீஹார் மாநிலம் சென்று ராஞ்சி என்ற ஊரில் வாழ்ந்தார். அவரது பத்திரிகையும் நிறுத்தப் பட்டது.

பதினைந்தாம் வயதிலேயே திருக்குரானை மனப்பாடமாக அறிந்த அபுல்கலாம் தேச பக்தர்; முகமது காஹிருத்தீனின் மைந்தர். தாயிடமிருந்து அரபு மொழியையும் தந்தையிடமிருந்து உருது மொழியையும் கற்றார். அவர் குரானை நன்கு அறிந்த சிறந்த முஸ்லீம். ஆங்கில மொழியை நன்கு கற்றார்.

தும் நாட்டு முஸ்லீம்களும் விடுதலைக்குப் பாடுபட வேண்டுமென்று உணர்ந்தார் "அல்-ஹிலால்" என்ற பத்திரிகையில் மிகவும் அழகாக எடுத்துக் காட்டினார்.

ராஞ்சியிலிருந்து நான்கு ஆண்டுகள் கழித்து வெளியேறினார். அப்போது ஆங்கிலேயரை எதிர்க்க காந்திஜியும் வந்துவிட்டார். 'ஜெனரல் டயர்' என்ற ஆங்கிலேய அதிகாரி 'ஜாலியன் வாலாபாக்' என்ற இடத்தில் கூடியிருந்த மக்களை நூற்றுக் கணக்கில் ஈவு இரக்கமற்றுக் கொன்றுவிட்டான். ஏராளமான இந்துக்களும், முஸ்லீம்களும் இதில் இறந்து விட்டனர். இதனால் அநேக முஸ்லீம்கள் ஆங்கிலேயருக்கு எதிராக எழுந்தனர். முதல் உலகப் போர் முடிவில் முஸ்லீம்களால் கலிபாவாகக் கருதப்பட்ட துருக்கி சுல்தானின் பேரரசின் பல பகுதிகள் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன. அதனால் கிலாபத் வலிமை குன்றியது. இதனாலெல்லாம் அபுல்கலாம் ஆஸாத் கூறியவை சரியென்று முஸ்லீம்கள் அறிந்து கொண்டனர். எனவே, ஆங்கிலேயர்கள் என்ன சொன்னாலும் என்ன சட்டம் போட்டாலும் அவர்களோடு ஒத்து உழைக்காமல் எதிர்க்க வேண்டும் என்று காந்திஜி கூறினார். அதன் படியே நடப்பதாக முஸ்லீம்களும் காந்திஜியிடம் கூறினர்; முஸ்லீம்களின் தலைவராக அன்று அவர்களை நடத்தியது மௌலானா அபுல்கலாம் ஆஸாத். அன்றுமுதல் டில்லி, பஞ்சாப், பீஹார், ஐக்கிய மாகாணம், வங்காளம் எல்லா இடங்களுக்கும் சென்று ஆங்கிலேயருக்கு எதிராகப் பேசினார். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டனர்; இந்துத் தலைவர்களைப் போல் முஸ்லீம் தலைவர்களும் தமது சொத்துகளை விட்டு, பட்டங்களை விட்டு, விடுதலைக்காக வேலைசெய்ய வந்தனர்.

இப்படிப்பட்டவரை ஆங்கிலேய அரசாங்கம் சும்மா விட்டுவைக்குமா? கைது செய்து சிறையில் தள்ளியது. ஓர் ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்தது. நாம் எதிர்பார்த்ததைவிடக் குறைந்த தண்டனைதான் இது என்று கூறினாராம்; எப்படியிருக்கிறது? அதன் பின்பு, காந்திஜி நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் அவர் கலந்துகொண்டார். முஸ்லீம் சகோதரர்கள் இந்தச் சுதந்திரப் போரில் நாட்டு மக்களோடு சேர்ந்திருக்க வேண்டுமென்று அவர்களுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தார். இந்து முஸ்லீம் கலகங்கள் ஏற்பட்டபோது இருவரிடமும் உருக்கமாக வேண்டிக் கொண்டார். ஆங்கிலேயர்கள் அவரை அடிக்கடி சிறையில் அடைத்தனர். தமது அருமை மனைவி இறந்த போதும் அவர் சிறையில்தான் இருந்தார்.

நாடு விடுதலை அடைந்தபோது, ஆஸாத் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவிருந்தார். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இவரைக்

கட்டாயமாக அமைச்சராக வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். காந்திஜியும் வேண்டிக் கொண்டார். அதனால் கல்வி அமைச்சராக இருப்பதாக ஒப்புக் கொண்டார். சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் இவரே. 1958-ல் இவர் இறந்தார்.

## பயிற்சி

(1) மௌலானா அபுல்கலாம் ஆஸாத் நடத்திய பத்திரிகை பெயர் என்ன?
(2) அந்தப் பத்திரிகையில் அவர் எழுதியது என்ன?
(3) 'ஜாலியன் வாலாபாக்'கில் நடந்தது என்ன?
(4) சுதந்திர இந்தியாவில் அவரது பணி என்ன?

# 23. சுபாஷ் சந்திர போஸ்

அன்று 1943ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் இந்தியாவின் மூவர்ணக் கொடி பறந்துகொண்டிருக்கிறது. இந்திய சுதந்திர அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக சுபாஷ் சந்திர போஸ் பதவி ஏற்கிறார். ஏராளமான மக்கள் கூடியிருக்கிறார்கள். இராணுவ வீரர்களும் அணிவகுத்து நிற்கிறார்கள். குழந்தைகளே, இந்தியா 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாளில் அல்லவா சுதந்திரம் பெற்றது? இதென்ன அதற்குமுன்பே சுதந்திர விழாக் கொண்டாட்டம்? இது எங்கே நடக்கிறது? இது இந்தியாவிலேயே நடக்கவில்லை. நம் நாடு விடுதலை அடைய பலமுறை போராட்டம் நடத்தினார் போஸ். பல முறை சிறை சென்றார். பின்பும் ஆங்கிலேயர்கள் நம் நாட்டிலிருந்து செல்லும் வழியாக இல்லை. எனவே, நாட்டிலிருந்து வெளியேறி ஜெர்மனி, ஜப்பான் நாடுகளின் உதவியோடு நம் நாட்டின் மீது படையெடுத்து ஆங்கிலேயர்களை விரட்ட முயற்சி செய்கிறார். இந்தக் கொண்டாட்டம் சிங்கப்பூர் நகரத்தில் நடக்கிறது. நாட்டின்மேல் இவ்வளவு பாசமா?



படம் 23. சுபாஷ் சந்திர போஸ்

ஆம். வங்காளத்தில் கட்டாக் நகரில் பிறந்த சுபாஷ் சந்திரபோஸ் நம் நாட்டின் வீரமகன். தம் வாழ்நாள் முழுவதும் நமது நாட்டிற்கே உழைத்த பெருமகன். கட்டாக் நகரில் மெட்ரிகுலேஷன்வரை படித்தார். பின்பு கல்கத்தா வந்து கல்லூரியில் படித்தார். கல்லூரி மாணவர்களிடையே சுபாஷ் தேச பக்தியை வளர்த்தார். இந்தியர்களை இழிவுபடுத்திப் பேசிய ஓர் ஆசிரியரை எதிர்த்தார். அதனால் இவரோடு பல மாணவர்களும் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்பு மற்றொரு கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. படித்து முடித்தார். அதன் பின்பு அவருடைய தந்தையார் இங்கிலாந்து சென்று ஐ. சி. எஸ். படிக்கச் சொன்னார். ஐ. சி. எஸ். படித்தால்தான் ஆங்கிலேய அரசாங்கத்திடம் உயர்நிலை வேலை பார்க்க முடியும். அப்படி வேலை பார்க்க சுபாஷுக்குப் பிரியமில்லை. எனவே, இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் நகரில் எம். ஏ. படித்து முடித்தார்.

அப்போது இந்தியா விடுதலை பெற காந்திஜி நாட்டு மக்களை ஒன்று சேர்த்திருந்தார். வங்காளத்தில் சித்தரஞ்சன் தாஸ் என்ற தலைவர் தமது வக்கீல் தொழிலை விட்டுவிட்டு நாட்டுத் தொண்டுபுரிய முன்வந்தார். அவ்வாறு சுபாஷ் ஐ. சி. எஸ். படிக்காமலேயே இந்தியா திரும்பினார். சித்தரஞ்சன்தாஸ் அவர்களைத் தமது குருவாகக் கொண்டார். இருவரும் காந்திஜியுடன் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்த்தனர். இருவரையும் ஆங்கிலேயர்கள் கைது செய்தனர்.

சிறையில் இருவரும் ஒரே அறையில் அடைக்கப்பட்டனர். சித்தரஞ்சன் தாசின் ஒழுக்கமும் எளிமையும் இவரை மிகவும் கவர்ந்தது. சிறையிலிருந்து வெளிவந்தபின் சித்தரஞ்சன் தாஸ் சட்டசபைத் தேர்தலில் நின்றார். சுபாஷ் சந்திர போஸ் அவருக்காகத் தேர்தலில் வேலை செய்தார்; நிறைய மேடைகளில் பேசினார். ஆங்கிலேயரிடமிருந்து நாம் விடுதலை அடைய இளைஞர்களுக்கு நாட்டுப்பற்று வேண்டுமென்பதை உறுதியாக எடுத்துச் சொன்னார். தாஸ் வெற்றி அடைந்தார். ஆனால், போஸை அரசாங்கம் திரும்பவும் கைது செய்தது.

1940ஆம் ஆண்டு திரிபுரா என்னும் இடத்தில் காங்கிரஸ் மகாநாடு நடந்தது. மகாத்மா காந்திஜியும் அவரைச் சேர்ந்தவர்களும் அஹிம்சா வழியில் சுதந்திரம் கேட்டுக்கொண்டிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையைப் போராடிப் பெற நினைத்தார். வெளிநாட்டினர் உதவியோடு ஆங்கிலேயரை விரட்ட நினைத்தார். இப்போது மறுபடியும் கைது செய்யப்பட்டார். விடுதலை யடைந்தபின் கல்கத்தாவில் தமது வீட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்ல நினைத்தார். ஒருவருக்கும் தெரியாமல் கல்கத்தாவிலிருந்து வெளியேறினார். அப்போது இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. போஸ் ஜெர்மனிக்குச் சென்று பின்னர் சிங்கப்பூர் சென்றார். அங்கே ஜப்பானியருக்கும் ஆங்கிலேயருக்கும் போர் நடந்துகொண்டிருந்தது. ஜப்பானியரிடம் சரணடைந்த இந்தியப் போர் வீரர்களையும் தென்கிழக்கு ஆசியாவில் வசித்துவந்த சில இந்தியர்களைக்கொண்டும் போஸ் இந்திய தேசிய இராணுவம் அமைத்தார். இந்திய தேசிய இராணுவத்தினர் உதவியால் இந்தியாவுக்குள் வந்து ஆங்கிலேயரை விரட்ட நினைத்தார். இந்தியா சுதந்திரமடைந்தது என்று அறிவித்தார். அதைத்தான் இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் படித்தீர்கள். இந்த வீரர்கள் இந்தியாவை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க வடகிழக்கு எல்லையில் போர் செய்தனர். ஆனால் வெற்றி பெறவில்லை.

இதற்குள் சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூரிலிருந்து டோக்கியோ சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியது. அதில் அவர் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஆங்கிலேயரை நாட்டிலிருந்து சீக்கிரமாக விரட்ட போர் தொடுத்த வீரர் சுபாஷ். அவர் நாடு விடுதலை அடைவதைக் காணவில்லை. ஆனால், அவர் வாழ்நாள் முழுவதும் தேசத்திற்காகவே வாழ்ந்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

## பயிற்சி

(1) சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவம் அமைத்தது ஏன்? எவ்வாறு?
(2) சுபாஷ் சந்திர போஸின் தியாகத்தை விளக்குக.

# 24. டாக்டர் அம்பேத்கர்

அவன் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த பையன். வகுப்பு நடந்து கொண்டிருந்தது. எல்லாப் பையன்களும் பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தனர். அவன் மட்டும் கீழே பாயில் உட்கார்ந்திருந்தான், அவனுக்குத் தண்ணீர் தாகமெடுத்தது. பையன்களிடம் கேட்டான். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து அவன் கையில் ஊற்றினார்கள். ஏன் இப்படி? அவன் ஒரு தாழ்த்தப்பட்ட ஜாதியாம். அவன் பெஞ்சில் மற்றவர்களோடு உட்காரக் கூடாது. அவனாகத் தண்ணீர்ச் செம்பைத் தொடக்கூடாது.



படம் 24.
டாக்டர் அம்பேத்கார்

டாக்டர் அம்பேத்கார்தான் இப்படிச் சிறுவயதிலேயே கஷ்டப்பட்டவர். பின்னால் நமது சுதந்திர இந்தியாவின் அரசாங்கம் எப்படிச் செயல்பட வேண்டுமென்று அரசியல் சட்டங்களை வகுத்த பெரிய நிபுணர் அவர் ஆயினும் பிறந்த குலம் தாழ்ந்த குலம் என்பதற்காக மேலே கண்டபடி அவமானப்படுத்தப்பட்டார். மிகச் சிறுவயதிலேயே இவ்வாறு வருந்தியதால் பின்னால் தாழ்த்தப்பட்டவர்களுக்காக தாம் பாடுபட வேண்டுமென்று உறுதி எடுத்துக் கொண்டார்.

அம்பேத்கார் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை இராணுவப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றார். தாம் ஓய்வு பெற்றவுடன் பம்பாய் நகருக்கு வந்தார். தமது இரு புதல்வரை அழைத்துக் கொண்டு வந்தார். அம்பேத்காருக்கு ஆறு வயதாக இருக்கும்போதே அவர் தாய் இறந்து விட்டார். பம்பாயில் அண்ணனும் தம்பியும் எல்பின்ஸ்டன் பள்ளியில் படித்தனர். அம்பேத்கார் மெட்ரிகுலேஷன் தேறினார். அப்போது அவருக்கு ரமாபாய் என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார்கள். அதன் பின்பு அவரைக் கஷ்டப்பட்டுக் கல்லூரியில் இரண்டாண்டுகள் படிக்க வைத்தார் அவர் தகப்பனார்.

அதற்குமேல் அவர் தந்தைக்கு பணவசதியில்லை. பரோடா சமஸ்தான மன்னர் மாதம் ரூ. 25 தர ஒப்புக்கொண்டார். இவ்வாறு பி. ஏ. பாஸ் செய்தார். அதன்பின் அதே மன்னரின் உதவியால் அமெரிக்கா சென்று பொருளாதாரத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்று திரும்பினார். தாம் மன்னரிடம் பெற்ற உதவிக்கு 10 ஆண்டுகள் அவரிடம் சமஸ்தானத்தில்

வேலை செய்ய வேண்டியிருந்தது. அப்படி வேலை செய்யும்போது தாம் தங்குவதற்கு ஒருவரும் இடம் கொடுக்கவில்லை. ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். சில நாள்களுக்குப் பின் அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று தெரிந்தது. அதற்குப் பிறகு அவர்களும் விரட்டி விட்டனர். வேலையை விட்டுவிட்டு மிகுந்த வருத்தத்துடன் பம்பாய் வந்து சேர்ந்தார்.

அதன் பின்பு பம்பாயில் சைடென்ஹாம் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது கோலாப்பூர் என்ற இடத்தின் மன்னர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக நிறைய உதவி வந்தார். அம்பேத்கார் அவருடன் சேர்ந்து சாதிக் கொடுமைகள் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தார். மகாநாடுகள் நடத்தினார். ஊமைகளின் தலைவன் என்ற பத்திரிகை நடத்தினார். எல்லோரும் சமம் என்பதை அதில் விளக்கினார். பணத்தைச் சேமித்து வைத்தார். தமது பார்ஸி நண்பர் உதவியுடனும் தமது பணத்துடனும் லண்டன் சென்று சட்டம் படித்து பாரிஸ்டராகத் திரும்பினார்.

வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். எனினும் அவருக்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் நினைவுதான் எப்போதும். இப்போது பம்பாய் அரசாங்கம் இவரை மேல்சபை உறுப்பினராக நியமித்தது. தகுதியுள்ள, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பதவி கொடுப்பதில் நியாயம் வேண்டும் என்று அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னார்.

அப்போது ஆறு, குளம், ஏரி இவை அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. அவற்றில் தாழ்த்தப்பட்டவர்களும் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்று பம்பாயில் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் 'மகாத்' என்ற ஊரில் உயர் ஜாதி மக்கள் தாழ்த்தப்பட்டோரைத் தண்ணீர் எடுக்க விடவில்லை. அம்பேத்கார் அங்கே தாழ்த்தப்பட்டோர் மகாநாடு நடத்தினார். ஊர்வலமாக அவர்களை அழைத்துச் சென்று அந்தக் குளத்தில் தண்ணீர் குடிக்கச் செய்தார். இதனால் முதலில் கலகம் விளைந்தது. எனினும் பின்னால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை விளைந்தது.

1930-ல் லண்டனில் நடந்த வட்ட மேஜை மகாநாட்டிற்கு இவரை ஆங்கில அரசாங்கம் அழைத்தது. லண்டன் சென்று தாழ்த்தப்பட்ட மக்கள் நிலையை விளக்கினார். அவர்களுக்கு அரசாங்கம் என்னென்ன செய்ய வேண்டுமென்று சுட்டிக் காட்டினார்.

மாநிலத் தேர்தல்கள் நடந்தபோது அம்பேத்கார் பம்பாய் மாநில சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சீக்கிரமே தொழில் மந்திரியாக நியமிக்கப்பட்டார். 1947-ல் நாம் சுதந்திரம் பெற்ற பிறகு நமக்கு எந்த விதமான அரசாங்கம் வேண்டுமென்று முடிவு செய்ய அரசியல் நிர்ணய சபை கூடியது. பாபு இராஜேந்திர பிரசாத் அதன் தலைவரானார். நமக்கு

வேண்டிய அரசியல் சட்டங்களை வரைய ஏழு பேர் நியமிக்கப்பட்டனர். அதில் அம்பேத்காரும் ஒருவராவார். கடுமையாக வேலை செய்து நமது அரசியல் சாசனத்தை அம்பேத்கார் உருவாக்கினார்.

ஒரு தாழ்த்தப்பட்ட மாணவர் தமது சொந்த முயற்சியால் படித்து முன்னேறினார். சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டத்தையே வரைவு செய்தார். எத்தகைய வளர்ச்சி! முயற்சியிருந்தால் முடியாதது என்னே?

1956 டிசம்பரில் அம்பேத்கார் நம்மிடமிருந்து பிரிந்தார். நமது சுதந்திர இந்தியா, தாழ்த்தப்பட்டவர்கள் கல்வியிலும் வாழ்விலும் முன்னேற முயன்று வருகிறது. அவரது ஆசைகள் நிறைவேறி வருகின்றன.

## பயிற்சி


(1) டாக்டர் அம்பேத்கார் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

(2) டாக்டர் அம்பேத்கார் கற்று நல்ல நிலைக்கு வந்தவுடன் மக்களுக்கு என்ன பணி செய்ய நினைத்தார்?

(3) சுதந்திர இந்தியாவிற்கு அவர் ஆற்றிய அருந்தொண்டு யாது?

# 25. காமராஜ்

"அத்தனை பேரும் படிக்கவேண்டும். வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படிப் படிப்பான்? ஏழைக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயே சோறு போட்டுப் படிக்க வைக்க வேண்டும். இது மிக முக்கியம். எப்படியும் எல்லா ஏழைகளும் படிக்க வேண்டும். அவர்களுக்குத்தான் தேசம்" இப்படிச் சொல்லி உட்கார்ந்தவர் அப்போதைய முதலமைச்சர் காமராஜ். நாட்டில் ஏழைச் சிறுவர் சிறுமியர் தங்கள் உணவிற்காகக் கூலி வேலை செய்யப் போவார்கள். அப்படிப் போகாமல் பள்ளிக்கூடத்திலேயே சாப்பாடு போட்டுவிட்டால் படிக்க வந்து விடுவார்கள் என்று நினைத்த பெருமகன் காமராஜ்.



படம் 25. காமராஜ்

தமிழ்நாட்டின் தென் பாண்டி நாட்டில் விருதுநகரில் குமாரசாமி என்பார்க்கும் சிவகாமி என்பார்க்கும் மகனாக 1903-ல் பிறந்தார் காமராஜ். அப்போது ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டு கொண்டிருந்தார்கள். விருதுநகர் வியாபாரத்திற்குப் பேர் போனது. ஆனால் காமராஜ் வியாபாரத்தை விட்டு, நாட்டின் நன்மையையே எண்ண ஆரம்பித்தார்.

காந்திஜி, நேருஜி போன்ற பெரிய தலைவர்கள் நமது சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதை அறிந்தார். காங்கிரஸ் கூட்டங்களுக்குச் சென்று சத்தியமூர்த்தி போன்ற தலைவர்கள் பேசுவதைக் கேட்டார். பின்பு தாமே பணம் வசூல் செய்து கூட்டங்கள் நடத்த ஆரம்பித்தார். காந்திஜி ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்றார். விடுதலைப் போராட்டத்தை நடத்தி வந்தார். காமராஜ் அதில் பங்கு கொண்டார். அதனால் 1920 முதல் 1947-ல் நாம் சுதந்திரம் அடையும் வரை சுமார் ஆறு தடவைகள் காமராஜ் நாட்டிற்காகச் சிறை சென்றுள்ளார். இவரது தொண்டின் பெருமையை காங்கிரஸ் கட்சி தெரிந்து கொண்டது. இவரைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

காமராஜ் திருமணம் செய்து கொள்ளவில்லை. வயதான தாயாரை யம் விட்டு எப்போதும் நாட்டுப் பணிக்காகவே அலைந்தார். 1954-ல் தமிழகத்தின் முதலமைச்சரானார். அப்போதுதான் தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகளில் எல்லாம் அதிகமான பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன.

ஒவ்வொரு சிற்றூரிலும் ஓர் ஆரம்பப்பள்ளி, ஒவ்வொரு பேரூரிலும் உயர் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. நாலைந்து சிற்றூர்களுக்கு ஓர் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகள் தொடர்ந்து படிக்க அவர்களுக்குப் பள்ளிக்கூடத்திலேயே உணவு கொடுக்க வேண்டுமென்று பேசினார். அதைத்தான் பாட ஆரம்பத்தில் கேட்டீர்கள். மதியம் உணவு கொடுப்பதற்கு அரசாங்கம் பணம் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்தார். இந்தியாவில் இப்படி ஒரு மதிய உணவுத் திட்டத்தை ஆரம்பித்து தமிழ்நாடு புகழ் பெற்றது.

கிராமம் தோறும் மின்சார வசதி செய்ய வழி செய்தார். இதனால் சிறு சிறு விவசாயிகள் பம்ப்செட் போட்டு நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச முடிந்தது. உணவு உற்பத்தி பெருகியது. அவர் முதலமைச்சரான போது செய்த பல காரியங்களில் சிறந்தவை இவை இரண்டும்.

எனினும் மக்களிடையே உண்மை நாட்டுபற்று குறைந்து வருவதைக் கவனித்தார். தாம் பதவியில் இருப்பதைவிடச் சாதாரணமான தொண்டனாகப் பணி செய்வதே சிறந்தது என எண்ணினார். அப்போது பிரதம மந்திரியாக இருந்த நேருஜியிடம் இதைக் கூறினார். இதைக் காமராஜ் திட்டம் எனப் புகழ்ந்தார் நேரு. இதன்படி காமராஜ் தாமாகவே முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார். மக்களோடு சாதாரணக் காங்கிரஸ் தொண்டனாக வாழ்ந்தார்.

ஆயினும் அவரைக் காங்கிரஸ் கட்சி விடவில்லை. அவரை அகில இந்திய காங்கிரஸ் தலைவராக்கியது. 1964-ல் நேருஜி இறந்தார். காமராஜ் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்து அந்த நிலையை நன்கு சமாளித்தார். லால்பகதூர் சாஸ்திரி, அவருக்குப் பின் திருமதி இந்திராகாந்தி ஆகியோர் பிரதமராவதற்கு உதவிபுரிந்தார்.

விருதுநகரில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த காமராஜ் இரு முறை இந்த நாட்டின் பிரதம மந்திரி பதவியை நிர்ணயித்தார். வாழ்வில் வேறெதையும் நாடாது, நாடு, நாடு என்றே வாழ்ந்த அவருக்கு இது ஒரு பெரிய வெற்றி. 1975 அக்டோபர் 2ஆம் தேதி மாலை அவர் இறுதிமூச்சு அடங்கும்வரை நாட்டுப் பணியே அவரது தலையாய வேலையாக இருந்தது.

## பயிற்சி

(1) காமராஜ் மதிய உணவுத் திட்டத்தை ஏன் கொண்டுவந்தார்?
(2) முதலமைச்சர் பதவியிலிருந்து காமராஜ் ஏன் விலகினார்?
(3) காமராஜ் முயற்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரிகள் யாவர்?

# 26. அறிஞர் அண்ணாதுரை

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒரு நாள் வரலாறு வகுப்பு: பேராசிரியர் உள்ளே நுழைகிறார்; அவர் கையில் முந்தைய நாள் மாணவர்கள் எழுதிய கட்டுரைத் தாள்கள்; ஆசிரியர் அவற்றைத் திருத்திக் கொணர்ந்திருக்கிறார். உள்ளே வந்ததும் ''அண்ணாதுரை, உன்னுடைய கட்டுரைக்கு எந்தெந்த புத்தகத்திலிருந்து குறிப்புகள் எடுத்தாய்?'' என்கிறார். மாணவர் அண்ணாதுரை ''ஐயா, என்னுடைய கட்டுரையை நானே எழுதினேன்; எந்தப் புத்தகத்திலிருந்தும் குறிப்புகள் எடுக்கவில்லை'' என்று பதிலளிக்கிறார்.


படம் 26. அறிஞர் அண்ணாதுரை

இவ்வாறு பேராசிரியரே ஆச்சரியப்படும் வண்ணம் படிக்கும்போதே கட்டுரை எழுதியவர் அண்ணாதுரை. பிற்காலத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறப்பாக எழுதினார். அத்துடன் அழகாக மேடையில் பேசினார். அண்ணாதுரை பேசுகிறார் என்றால் நாற்பது ஐம்பது மைல் தூரத்திலிருந்து ஏராளமான மக்கள் கூடிவிடுவார்கள். படித்த மேதைகளும் படிக்காத பாமர மக்களும் அவர் பேச்சைக் கேட்டனர். மக்களுக்கு விளங்க வைக்க குட்டிக் கதைகள் கூறுவார். அழகான உவமானங்கள் கூறுவார். அவருடைய ஆங்கிலப் பேச்சைப் பெரிய மேதைகளும் பாராட்டினர்.

அண்ணாதுரை காஞ்சீபுரத்தில் 1909ஆம் ஆண்டு பிறந்தார். காஞ்சியிலேயே உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்த பின்பு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. ஆனர்ஸ் படித்தார்.

படித்து முடித்த பின்பு யாருக்கும் அடிமையாக வேலை செய்யப் பிரியப்படவில்லை. அப்போது தமிழ்நாட்டில் மக்களிடையே மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றவும் பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் திராவிடர் கழகம் தோன்றியது. அதில் அண்ணாதுரை சேர்ந்து பணிபுரிந்தார். அண்ணாதுரை திராவிட நாடு என்ற வாரப் பத்திரிகையை நடத்தினார். ஆங்கிலத்திலும் ஹோம்லாந்து பத்திரிகை ஆரம்பித்தார். அவைகளில் அண்ணாதுரை மிக அருமையாக எழுதினார். பின்னர் கருத்து வேற்றுமையினால் பெரியாரிடமிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கழகத்தை ஆரம்பித்தார்.

மேடைப் பேச்சிலும் எழுதுவதிலும் மிகச் சிறந்த இவரை மக்கள் 'அறிஞர் அண்ணாதுரை' என்று அழைத்தனர். அதுமட்டுமன்று; நல்ல நாடகங்கள் எழுதி, அதில் தானும் கலந்துகொண்டு நடித்தார். நாடகங்கள் மூலம் சமூக சீர்திருத்தங்களுக்கு பிரசாரம் செய்தார்.

இதனால் மக்களிடையே நல்ல மதிப்புப் பெற்றார். இந்தச் சமுதாயத்தில் உள்ள குறைகளைச் சொன்னால் போதுமா? தமிழ்நாட்டில் அரசாள வேண்டாமா? தி.மு.க. 1967ல் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றியது. அண்ணாதுரை முதலமைச்சர் ஆனார்..

தமிழ்மொழி பழைமை வாய்ந்தது. உலக முழுவதிலும் தமிழர் பரவி உள்ளனர். அண்ணாதுரை முதலமைச்சரானதும் சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். இதனால், பல நல்ல நூல்கள் வெளிவந்தன. தமிழ்மொழி வளர்ந்தது. உலகம் முழுவதிலும் உள்ள தமிழறிஞர்கள் தமிழகம் வந்து சென்றனர்.

இவருடைய அறிவாற்றலைக் கண்டு அமெரிக்காவில் 'யேல் பல்கலைக் கழகம்' இவரை அங்கு வந்து சில நாளிருக்க அழைத்தது. அந்தப் பல்கலைக் கழகத்தின் விருந்தினராகச் சென்று திரும்பினார்.


ஆனால், துரதிர்ஷ்டவசமாக முதலமைச்சரான இரண்டு ஆண்டுகளிலேயே அவர் புற்றுநோயினால் இறந்தார். எனினும் அவரது அழகான எழுத்து, மேடைப் பேச்சு, நாடகங்கள், திரைக் கதைகள் மறக்கமுடியாதவை. இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் மிகவும் சிறந்த பேச்சாளர்களில் ஒருவர் அண்ணாதுரை. ஒரு கட்சியை உருவாக்கி இருபது வருடத்தில் ஆட்சி பீடத்தில் அமர்த்திய பெருமை அவரைச் சேர்ந்தது.

## பயிற்சி

(1) அண்ணாதுரை அவர்கள் நடத்திய பத்திரிகைகள் யாவை?
(2) நாடகங்கள் மூலம் அவர் எடுத்துக் காட்டியதென்ன?
(3) இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு பற்றி எழுதுக?
(4) அவரைக் கௌரவித்த அமெரிக்கப் பல்கலைக்கழகம் யாது?

# 27. பெரியார் ஈ. வெ. ராமசாமி

ஈரோடு நகரத்தில் 500 மரங்கள் கொண்ட அழகான தென்னந் தோப்பு; ஒருநாள் அத்தனை மரங்களும் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தன. அத்தனையும் காய்க்கும் நல்ல மரங்கள்; ஏன் வெட்டினார்கள்? யார் வெட்டினார்கள்? தோப்பின் சொந்தக்காரர் ஈ. வெ. ராமசாமிதான் அதை வெட்ட ஏற்பாடு செய்தார். கள் குடிப்பதால் ஏழைகள் பணமும் வாழ்வும் வீணாகிறதென்பதை உணர்ந்த காந்திஜி கள்ளுக் கடைகளுக்கு முன் நின்று அதனை மூடுமாறு சத்தியாக்கிரகம் செய்ய மக்களை அழைத்தார். அதன்படி கள் இறக்குவதற்காகக் குத்தகைக்கு விடப்பட்டிருந்த தனது தென்னந் தோப்பையே வெட்டிச் சாய்த்தார்.



படம் 27.
பெரியார் ஈ. வெ. ராமசாமி

ஈரோடு நகரில் வெங்கட்டப்ப நாயக்கர், சின்னத்தாயம்மாள் என்பவர்களுக்கு 1879ஆம் ஆண்டு பிறந்தார். நிலபுலன்கள் ஏராளமாக இருந்தன. தந்தையின் வாணிகத்தை சிலநாள்கள் கவனித்தார். சீக்கிரமே நகர்மன்றத் தலைவரானார். ஈரோட்டிற்குக் காவிரியாற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வந்த பெருமை அவரையே சாரும்.

விடுதலை இயக்கத்தில் சேர்ந்து காந்திஜி காட்டிய வழியில் சென்றார். முதலில் தமது தென்னந்தோப்பை வெட்டிச் சாய்த்தார். நகர்மன்றப் பதவியை உதறித் தள்ளினார்; கதர்த் துணிகளைத் தாம் சுமந்து ஊர்ஊராகச் சென்று விற்றார். தமிழ்நாடு காங்கிரசு தலைவரானார்.

தீண்டாமைக்கு எதிராகச் சத்தியாகிரகம் நடத்தினார். கேரளத்தில் வைக்கம் என்ற ஊரில் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களில் தாழ்ந்த ஜாதி மக்கள் நுழையக்கூடாது என்றிருந்தது. அதை எதிர்த்துப் போராட்டம் நடந்தது. அதைக் கடைசிவரை வெற்றிகரமாக நடத்தினார். தெருக்களில் மட்டுமன்றி கோவில்களிலும் நுழைய தாழ்ந்த ஜாதி மக்களுக்கு முடிந்தது. மாதக்கணக்காக இதை நடத்தித் துன்பம் அனுபவித்த பெரியார் வைக்கம் வீரர் எனப் பாராட்டப்பெற்றார்.

கருத்து வேறுபாடு காரணமாக காங்கிரசிலிருந்து வெளியேறினார். உயர் ஜாதி. தாழ்ந்த ஜாதி என்ற வேறுபாடு மக்கள் சமுதாயத்தில் உள்ளது

கண்டு மனம் வேதனைப்பட்டார். அந்த வேறுபாட்டினைக் களைவதற்குச் **சுயமரியாதை** இயக்கத்தை ஆரம்பித்தார். மகாநாடுகள் பல நடத்தினார்.

அறிவுக்குப் பொருந்தாத மூடப் பழக்கவழக்கங்களை அகற்றப் பாடுபட்டார். அதுவே அவரது பகுத்தறிவுப் பிரச்சாரமாயிற்று. **திராவிடர் கழகம்** என்ற கட்சியை இதற்காகத் துவக்கினார். ஆடம்பரமும் அறிவுக்கு ஒவ்வாத பழக்கமும் இன்றி எளிமையான, சிக்கனமான முறையில் திருமணங்கள் நடத்தவேண்டுமென்று கூறினார். அவ்வாறு பல்லாயிரக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களை நடத்திவைத்தார். இவர் நிறுவிய திராவிடர் கழகம் சமுதாயச் சீர்திருத்தக் கழகமாகும்.

பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று சுமார் அறுபது ஆண்டுகள் தமது கொள்கைகளை எடுத்துக் கூறினார். இதன் காரணமாக எத்தனையோ நூற்றாண்டுகளில் சாதிக்கவேண்டியவற்றை தமது வாழ்நாளிலேயே சாதித்தார். தமது கொள்கைகளுக்காக இருபத்தியொரு முறை சிறை சென்றுள்ளார். தமது 95ஆவது தள்ளாத வயதிலும் இறப்பதற்குச் சிலநாள் முன்வரை ஊர் ஊராகச் சென்று மக்களுக்குப் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார். இன்று தமிழ்நாட்டில் ஓரளவு ஜாதி வேறுபாடுகள் மறைந்து யாவரும் கல்விகற்க வருகிறார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் பெரியாரே.

பெரியாரின் தொண்டினைப் பாராட்டித் தமிழக அரசாங்கம் சென்ற 1979ஆம் ஆண்டு முழுவதும் நூற்றாண்டு விழாக் கொண்டாடியது. கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து ஈரோடு உட்படச் சில பகுதிகள் பிரிக்கப்பட்டுப் **பெரியார் மாவட்டம்** என ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## பயிற்சி

(1) வைக்கம் ஊரில் எதற்காகப் போராட்டம் நடந்தது ?

(2) நகர்மன்றத் தலைவராகப் பெரியார் சாதித்த முக்கியமான காரியம் எது ?

(3) பெரியார் செய்த தொண்டினைப் பாராட்டி தனது நன்றியை எவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது?

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:
பழனியப்பா பிரிண்ட்-என்-பேக்,
சிவகாசி-626 123.